தனிப் பிரதி விலை அணா 0—1—6.

Reg. No. M. 3066. 1936-மார்ச்சு 1.

PAHUTHARIVU ("REASON")

(இதழ் 11.)

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் உயர்ந்த மாத வெளியீடு.

பெரியார் முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலைமாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

ஜாதி அழிப்பு (பாட்டு) (சாமி சிதம்பரனார்) 1
ஐயுறவின் அருமை (சாமி சிதம்பரனார்) 3
கட்டுக்கதைகள் (ஔவையார்) 8
பேய் ஓட்டல் (ப. ஜகந்நாதன்) 11
தமிழர்களுக்குக் கற்பில்லையா? (பண்டிதை ஞானாம்மாள்) 16
அரக்கர்கள் யார்? 20
விடுதலை வேண்டும். (பாட்டு) (எஸ். சிவப்பிரகாசம்) 28
புதுமைப்பெண் (பண்டித எஸ். முத்துசுவாமிப்பிள்ளை) 29
சுயமரியாதைக் காரரும், மதமும் 32
மதக்கல்வியும், மாணாக்கர்களும் (டாக்டர் பாராஞ்சிபே) 38
துருக்கியும், இந்தியாவும் (ஆர். சுப்பையா) 49
மாம்ச ஆகாரமும், பார்ப்பனர்களும் 58

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 1. ஈரோடு. 1936 மார்ச்சு 1. இதழ் 11.

ஜாதி அழிப்பு.

(சாமி. சிதம்பரனார்.)

("அடைக்கலமே அடைக்கலமே" என்பதுபோல)

பல்லவி.

அழித்திடுவீர்! அழித்திடுவீர்!
அழித்து வேற்றுமை யெல்லாம்
ஒழித்து நலம்பெறுவீர்!
(அழித்திடுவீர்)

அநுபல்லவி.

நீதி நெறி யிந்த நிலந்தனில் வாழ
நின்று கெடுக்குஞ் சாதி பேதம்போய் வீழ
(அழித்திடுவீர்)

சரணங்கள்.

1 பிறப்பினில் மனிதருள் வேற்றுமையில்லை;
பேதையர் சாதிகள் பேசினர் தொல்லை;
சிறப்பினைத் தடை செய்து மறித்திடுங் கல்லை.
சிதறிடத் துணைக்கொள்வீர் ஒற்றுமைச் சொல்லை.

(அழித்திடுவீர்.)

2 வஞ்சகர் நலம்பெற வகுத்தனர் சாதி;
வைத்ததைக் கட்டியே அழுவதென் நீதி?
நஞ்சென நிலை நின்று நலிகின்ற பேதி.
நசித்திட நாட்டினில் அறிவுரை ஓதி.

(அழித்திடுவீர்)

3 மனிதருள் ஒற்றுமை வளர்த்திடில் ஊக்கம்
மரமென வேர்கொண்டு செழித்திடும் ஆக்கம்;
இனிமையைக் கெடுக்கின்ற வறுமையின் நீக்கம்
எய்திடும் ஏனையா! உமக்கின்னும் தூக்கம்?

(அழித்திடுவீர்)

4 வாழ்வுக்குத் துணை செய்யும் தொழில்களில் பேதம்
வகுத்ததனாலிங்கே விளைந்தது சேதம்;
தாழ்வுக்கு மனிதர்கள் நடந்திட போதம்
தந்தது மதமெனும் ஒரு பெரும் பூதம்.

(அழித்திடுவீர்)

"எந்த ஜனங்கள் சமூக சீர்திருத்த மில்லாமல் அரசியல் சுதந்திர இயக்கம் நடத்துகின்றார்களோ அவர்கள் தேசத்தை நடத்த தகுதியற்றவர்கள் என்பது எனது அபிப்பிராயம்.

(லாலா லஜபதி.)

ஐயுறவின் அருமை.

(சாமி சிதம்பரனார்.)

ஐயுறவின் அருமை என்ற தலைப்பெயரைக்கண்டுபயந்து விடாதீர்கள்! ஐயுறவு என்றால் சந்தேகம் என்று பொருள்; அருமை என்றால் சிறப்பு என்று அர்த்தம்; ஆகவே சந்தேகத்தின் சிறப்பு என்பதே இக்கட்டுரையின் பெயர்.

சந்தேகத்தைப் பற்றி இவ்வளவு தடபுடலாக ஆரம்பித்தால் என்னையும் ஒரு சந்தேகப் பேர்வழியாக நீங்கள் நினைக்கலாம். ஆம்! உண்மையில் நானும் சந்தேகப் பேர்வழி தான். உண்மையில் நீங்களும் சந்தேகப் பேர்வழிகளாக வேண்டும் என்பது தான் எனது ஆசை.

"தொட்டதில் எல்லாம் சந்தேகம் கூடாது; எடுத்ததில் எல்லாம் சந்தேகம் கொள்வது தவறு; சாஸ்திரங்களின் கொள்கைகளில் சந்தேகப்படக்கூடாது; மதக்கொள்கைகளில் சந்தேகப்படக் கூடாது; பெரியோர் மொழிகளில் சந்தேகப் படக்கூடாது; நம்பிக்கையே சிறந்ததாகும்; சந்தேகப்படுகின்ற குணமுடையவன் விபரீத புத்தி கொண்டு விடுவான்; குயுக்தி வாதியாகி விடுவான்; இறுதியில் நாஸ்திகனாகவும் ஆகி விடுவான்; ஆகையால் நம்பிக்கையே சிறந்ததாகும்." என்று நம்பிக்கையில் பற்றுக் கொண்டவர்கள் சொல்லுவார்கள். வைதிகர்களும் இதையே உறுதி செய்வார்கள்; சந்தேகத்தின் சிறப்பை உணராதவர்களும் இதற்கு ஆமாம் சாமி தான்போடுவார்கள்.

ஆனால் பகுத்தறிவு வாதிகள் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். நம்பிக்கையைக் காட்டிலும் சந்தேகமே சிறப்புடையது என்பது அவர்கள் கொள்கை. இக்கொள்கையே உண்மையும் ஆகும்.

பார்ப்பதையும், கேட்பதையும், படிப்பதையும், பிறர் சொல்லுவதையும் அப்படியே நம்புகிறவன் அறிவாளியாக இருக்கமுடியாது. நம்பிக்கை அறிவை மழுக்கிவிடுகிறது. நம்பிக்கையினால் மனிதன் தனது அறிவு சக்தியை இழந்துவிடுகிறான்.

சந்தேகம் உண்மையை நாடத் தூண்டுகிறது. சந்தேகவாதி உண்மை நாடுவோனாகி விடுகிறான். பார்ப்பதிலோ, கேட்பதிலோ, படிப்பதிலோ, பிறர் கட்டளையிலோ சந்தேகம் ஏற்படாவிட்டால் அவற்றின் உண்மைகளை எப்படி அறிய முடியும்? சந்தேகம் கேள்வியை எழுப்புகிறது. கேள்வி உண்மையான பதிலை நாடுகிறது. உண்மையான பதில் இன்னதென்று தெரிகிறபொழுது பொய்மைகள் பறந்து விடுகின்றன; மெய்மைகள் காணப்படுகின்றன. இதுவே சந்தேகத்தினால் உண்டாகும் நன்மை.

மனித வாழ்க்கையை நாசப்படுத்துவது பயம். மனிதனை பலமற்றவனாகச் செய்து வைத்திருப்பதும் பயம். மனிதனை அடிமைப் புத்தியுள்ளவனாகச் செய்து வைத்திருப்பதும் பயம். பயத்தை உற்பத்தி செய்வதற்குக் காரணம் நம்பிக்கை. மோட்சம், நரகம், மறுபிறப்பு, தலைவிதி, கடவுள், கடவுள் உலகங்கள், பேய் பிசாசுகள், சோதிடம், மந்திரம், போன்றவைகள் மனிதனைப் பயம் அடையச் செய்கின்றவைகள். கற்றுத் தேர்ந்த அறிவாளிகள் என்ற பெயர் படைத்தவர்களும் இவற்றை நம்புகிறார்கள்; இவைகளுக்கு பயப்படுகிறார்கள்; தமது அறிவினாலும், திறமையினாலும் காரியங்களை நடத்துகின்றவர்களில் கூடச் சிலர் இவற்றில் நம்பிக்கை வைத்து அஞ்சுகிறார்கள்.

மேலே கூறிய மோட்ச நரகம் முதலிய கற்பனைச் சொற்களால் மனித சமூகம் அடையும் துன்பத்தை அளவிட முடியுமா? இவைகளை அப்படியே நம்புகிறவன் மனச்சமாதானத்துடன் வாழ முடியுமா? உலக இன்பங்களை மனம்போனபடி அனுபவிக்க முடியுமா?

இவைகள் உண்மையாக இருக்க முடியுமா? இவற்றை யாராவது நேரே பார்த்திருக்கிறார்களா? பார்த்தவர்கள் இவற்றைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார்களா? எல்லா மதத்தார்களும் இவைகளைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்?

எல்லாரும் ஒரு முடிவைக் கூறவில்லையே! அவரவர்கள் மனதிற்குத் தோன்றியபடி தாறுமாறாகத்தானே பிதற்றியிருக்கிறார்கள்! இவர்களில் யார் சொல்லுவது உண்மை? என்ற சந்தேகங்கள் தோன்றுமானால் இவைகளின் உண்மை வெட்டவெளிச்சமாகி விடும் பிறகு இவைகளால் ஏமாறமாட்டார்கள். இந்தச் சந்தேகிகளை ஏமாற்றவும் முடியாது.

எல்லாவற்றையும் ஆராய்ந்து உண்மை காணுதல் என்பது முடியாது; சிலவற்றைப் பெரியோர் — அல்லது—முன்னோர் - அல்லது பழக்கத்தை யொட்டி நம்பித்தான் ஆகவேண்டும். சொன்னபடி தனது தாய் தந்தையர்களைக்கூட ஒருவன் நம்பாமலிருக்க முடியமா? என்று சிலர் எதிர்த்து வாதாடுவதுண்டு.

ஆம்! உண்மையை நம்ப வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். உண்மை எப்பொழுதும் மெய்ப்பித்துக் காட்டக் கூடியதாகும். தாய் தந்தையர்களை நம்பும் விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஒருவனுடைய தாய் இன்னார் என்று தீர்மானிப்பதில் ஒன்றும் சிரமம இல்லை; ஆனால் தந்தை விஷயத்தில் கொஞ்சம் சிரமம் உண்டு. தந்தை இன்னார் என்பதை நிச்சயிக்க உண்மையில் தாயால் தான் முடியும். ஒரு பெண் கணவனிருக்கும்போதே தவறான ஒழுக்கத்தினால் பிள்ளை பெற்றிருக்கலாம். உண்மையாகவே அவள் கணவன் அக்குழந்தை தனக்குப் பிறந்ததென்றே நம்பிகொண்டிருக்கலாம். குழந்தையும் தன் தாயின் கணவனையே தந்தையென்று கூப்பிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் உண்மைத் தந்தை, யார் என்பதை அந்தத் தாயைத் தவிர வேறு யார் அறிவார்? ஆகவே தந்தை விஷயத்தில் கூட நம்பிக்கை தவறாக முடிகிறதைக் காண்கிறோம்.

சிலர், நமது அரசரை நாம் நேரே காணுவதில்லை. அவர் எங்கோ தூரதேசத்தில் இருப்பதாகக் கூறுகிறார்கள். அவருடைய தலை அடையாள மிட்ட பணங்களையும், முத்திரைகளையும், பணநோட்டுகளையும் மாத்திரமே காண்கிறோம். இவைகளைக் கொண்டு தான் அரசர் இருப்பதாக நம்புகிறோம்; ஆதலால் பெரியோர் சொற்களைக் கொண்டும், சாஸ்திரங்களைக் கொண்டும் மோட்சம் முதலியவைகளை நம்ப வேண்டியது தான் என்று கூறுவார்கள்.

இதுவும் போலி வாதம் என்றே நாம் கொள்ளவேண்டும். அரசர், இருப்பதையும், பல பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையும், பேசுவதையும், அவருடன் கூட இருந்து பார்ப்பவர்களின் மூலம் பத்திரிகைகளினால் அறிகிறோம். அவருடைய சொற்பொழிவைக் கூட இப்பொழுது ஆகாய வசனிக் கருவியின் மூலம் கேட்கிறோம். அவருடைய ஒவ்வொரு பருவத்திலும் எடுக்கும் படங்களைப் பார்க்கிறோம். அரசர் கலந்து கொள்ளும் கொண்டாட்டத்தில் எடுக்கப் பட்டு வெளிவரும் புகைப்படங்களையும்காணுகிறோம்; இவைகளிலும் நம்பிக்கையில்லை என்றால் நேரே சென்று பார்த்து விட்டு வரலாம். ஆதலால் அரசர் இருக்கிறார் என்று நம்புவதில் தவறில்லை.

ஆனால் கடவுள உண்டு; அவராலேயே இவ்வுலகம் உண்டாக்கப்பட்டிருக்கிறது; குயவன் சட்டிபானைகளைச் செய்வது போல இவ்வுலகத்தைக் கடவுள் உண்டாக்கி யிருக்கிறார்; ஒவ்வொரு நாளும் நடக்கும் எல்லாக் காரியங்களும் அவருடைய சத்தியாலேயே நடைபெறுகிறது; ஆகையால் கடவுளை நம்பு; சாஸ்திரங்களை நம்பு; மதங்களை நம்பு; மதக் குருமார்களை நம்பு என்று கூறினால் இதைஎப்படி நம்புவது? கடவுள் இருக்குமிடத்தையாராவது நேரே காட்ட முடியுமா? கடவுளைநேரே காட்ட முடியுமா? கடவுள் இதுவரையிலும் எந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்? கடவுளுடைய உருவத்தை யார் கண்டது? உலகத்தில் இப்பொழுது நடைபெறும் விஞ்ஞான அதிசயங்கள் யாவும் அறிவுடைய மனிதர்களால கண்டுபிடிக்கப்பட்டவைகள் தானே? ஆண் பெண் சேர்க்கையில்லாமல் மக்கள் அந்தரத்திலிருந்து கடவுளால் அனுப்பப்படுகிறார்களா? ஆணும் பெண்ணும் ஒரு ஐப்பது ஆண்டுகளுக்கு ஒத்துழையாமை செய்தால் உலகத்தில் மனிதப் பூண்டே அற்று விடும் அல்லவா? மத வாதிகள் சொல்லுவது போல கருணாசாகராகிய ஒரு கடவுள் இருந்தால் உலகில் இவ்வளவு அக்கிரமங்கள் நடைபெறுமா? கோடிக் கணக்கான மக்கள் பட்டினியினால் மடிவார்களா? நோயினால் மாள்வார்களா? கொடூரயுத்தத்தில் குண்டுக்கு இரையாவார்களா? இன்னும் பலவகையில் அலங்கோலமாக இருப்பார்களா? இவைகளுக்கும் கடவுள்தான் காரணம் என்றால் அக்கடவுள் கருணையுடையவராக—நல்லவராக—மக்களைப் பரிபாலிப்பவராக இருக்க முடியுமா? இவற்றுக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் இல்லையென்றால் இவற்றை ஏன் கடவுள் கவ

ளிக்க வில்லை? என்ற கேள்விகள் எழுந்தால் சந்தேகம் தோன்றுகிறதல்லவா? கடவுளின் மேல் இத்தகைய சந்தேகம் தோன்றி ஆராய ஆரம்பிக்கும் போது, கடவுள் இல்லை; இருக்க முடியாது; இருந்தாலும் அதனால உலகிற்கு—மக்களுக்கு ஒரு பயனும் இல்லை, என்ற முடிவுக்குத்தான் அறிவாளிகள் வரமுடியும்.

நம்பிக்கை எப்பொழுதும் நன்மையான முடிவையளிக்க முடியாது; சில சமயங்களில் நன்மையான முடிவை யளிக்கலாம்; சில சமயங்களில் நன்மையோ தீமையோ ஒன்றும் இல்லாமலே பயனின்றி முடியலாம்; சில சமயங்களில் தீமையையே கொடுக்கலாம். ஆனால் சந்தேகம் எப்பொழுதும் நன்மையான முடிவையே அளிக்க முடியும் என்பது நிச்சயம். இதை ஒரு உதாரணத்தால் காண்போம்.

நல்ல சாலை; நடுவில் மேடுபள்ளம் இல்லை; தூசு தும்புகளும் இல்லை; சுத்தமாக இருக்கிறது; அகலமான வழியும் கூட; ஆனால் இருபுறங்களிலும் புதர்கள் அடர்ந்திருக்கின்றன; பகல் நேரங்களில் மக்களும் வண்டி முதலியவைகளும் அதிகமாகப் போய்க் கொண்டிருப்பதால் விஷ ஜெந்துக்கள் நடமாடுவதில்லை. ஆகையால் பகல் நேரத்தில் சாலையில் தாராளமாக நிலத்தைக் குனிந்து பார்க்காமலே நடந்து செல்லலாம்; இதனால் ஆபத்து ஒன்றும் நேராது. ஆனால் இரவுக்காலத்திலும் இவ்வாறு செல்ல முடியுமா? பகல் காலத்தில் இருக்கும் நிலையை நினைத்துக் கொண்டு இரவுக்காலத்திலும் விஷ ஜெந்துக்கள் ஒன்றும் வராது என்று நினைத்துக் கொண்டு செல்லுவது பைத்தியக் காரத்தனம் அல்லவா? அதிக நடமாட்டம் இல்லாத இரவுக்காலத்தில் விஷ ஜெந்துக்கள் நடமாடும் என்ற சந்தேகம் தோன்ற வேண்டாமா? இந்தச் சந்தேகம உள்ளவன் தான் இரவில் எச்சரிக்கையுடன் வெளிச்சங்கொண்டு செல்லுவான். பகலை நினைத்துக் கொண்டு அதே நம்பிக்கையுடன் சென்றால் ஆபத்து உண்டாகாது என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

ஆகவே எப்பொழுதும் சந்தேகத்தின் முடிவு அறிவுடைமை என்பதிலும், அறிவுடைமை உண்மை காட்டும் என்பதிலும், உண்மை காணல் நன்மை தரும் என்பதிலும் ஐயமில்லை. ஆதலால் நம்பிக்கையைக் காட்டிலும் சந்தேகம் சிறந்ததென்பதை உணரலாம். சந்தேகம் தோன்றுமானால் அதை விருத்தி செய்யவேண்டுமேயொழிய அதை அடக்குதல் அறிவுடைமைக்கு அடையாளமாகாது.

கட்டுக் கதைகள்.

(ஔவையார்)

கட்டுக்கதைகள் இல்லாத நாடுகளே இந்த உலகத்தில் இல்லை. அறிவு வளர்ச்சியடையாத பண்டைக்கால மக்கள் இயற்கைப்பொருள்களின் உண்மைத் தோற்றங்களையும், காரணங்களையும் அறியாமல் பல திறப்பட்ட கட்டுக்கதைகள் எழுதி வைத்தனர். சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், கிரகணங்கள் முதலியவைகளைப்பற்றி நமது புராணங்கள் கூறும் கட்டுக்கதைகளை நாம் நன்கு அறிவோம்.

அவைகளைப் போன்ற கதைகள் மேனாடுகளிலும் இருந்தே வந்திருக்கின்றன.

சூரியனும், சந்திரனும்.

சூரிய சந்திரர்களைப்பற்றி எஸ்கியுமோ ஜாதியாருக்குள் வழங்கும் ஒரு கதை வேடிக்கையாக இருப்பதுமன்றி மனோகரமாகவுமிருக்கிறது.

ஒருபெண் ஒருவிருந்துக்குச் சென்றிருந்தாளாம். விருந்துண்ட பின்னர் இரவு கள்ளிருளில் எல்லாரும் கூடியாடிவிளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு இளைஞன அந்நாட்டு வழக்கப்படி காதலைத் தெரிவிக்குக்கும் பொருட்டு அப்பெண்ணின் தோளைப்பிடித்து அசைத்தானாம்.

இருட்டிலே தன்னைக் காதலித்தவன் யார் என்பதை அப்பெண்ணால் அறிந்து கொள்ள முடியவில்லை. உடனே அவள் ஒரு தந்திரம் செய்தாளாம்.

புகைப்போக்கியண்டை சென்று தன் கைகளில் கரியைப் பூசிக் கொண்டு கூட்டத்தில் கலந்து தன் காதலனைக் கண்டு பிடிக்க ஆயத்தமாயிருந்தாளாம். மீண்டும் அவளது காதலன்

அந்த தோன்றி அவளது தோளைப் பிடித்து அசைத்தானாம் உடனே அவள் அவனது கன்னத்தில் கரியைப் பூசிவிட்டாளாம். அப்பால் விளக்குக் கொண்டு வரப்பட்ட போது தன்னைக் காதலித்தவன் தன் தமையன் என உணர்ந்து உடல் நடுங்கி ஓட்டமெடுத்தாளாம்.

காதலுக்குக் கண்ணுண்டா? மூக்குண்டா? முறையுண்டா!

காதலனும் காதலியைத் துரத்திக் கொண்டு அவள் பின்னால் ஓடினான். காதலி அகப்படவில்லை; காதலனும் விடவில்லை. இவ்வண்ணம் இருவரும் வெகு நாள் ஓடிக் கொண்டே இருந்தனர். இறுதியில் காதலி பூமியின் எல்லையை அடைந்தாள். காதலனும் நெருங்கினான். வேறு வழியில்லை. காதலி வானமண்டலத்தில் குதித்து மறையத்தொடங்கினாள். காதலனும் அவளைப் பின பற்றினான். வான மண்டலத்தை யடைந்ததும் காதலி சூரியன் ஆனாளாம்; காதலன் சந்திரனானானாம். பின்னும் ஓட்டம் நிற்கவில்லையாம். இப்பொழுதும் சந்திரன் சூரியனைப் பின் தொடர்ந்து விரட்டிக் கொண்டே இருப்பதற்கு அவனது காதலே காரணமாம். காதலி தேய்த்த கரிக்கு அறிகுறியாகவே இப்பொழுதும சந்திரன் முகம் மாதம் ஒரு முறைகரியமாக இருக்கிறதாம். டியூட்டனிக் (Tewtonic) பாஷைகளில் சூரியனைப் பெண்ணாகவும் சந்திரனை ஆணாகவும் வழங்குவது மரபு.

பிற்காலத்தில் சில தேசத்தார் சூரியனை ஆணாகவும் சூரியனுக்கு முன் தோன்றும் உஷையைப் (விடிபொழுதை) பெண்ணாகவும் சூரியனை உஷையின் காதலனாகவும் அவன் அவளைப் பிடிக்கச் செல்வதாகவும் வழங்கியுள்ளார்.

நக்ஷத்திரங்கள்.

நக்ஷத்திரங்களைப் பற்றிய கதைகளும் மிகவும் வியக்கத்தக்கவைகளாகவே இருக்கின்றன. ஆசிய தேசக்கதை யொன்று பின்வருமாறு:—

சூரியனும் சந்திரனும் பெண்களே, நாம் இப்பொழுது காணும் நக்ஷத்திரங்கள் எல்லாம் சந்திரனின் குழந்தைகள் சூரியனுக்கும் ஒருகாலத்திலே ஏராளமான குழந்தைகள் இருந்தன. சூரியன, சந்திரன் அவற்றின் குழந்தைகள் முதலியவைக

வின் ஒளியை உலக மக்கள் தாங்கமாட்டார்கள் என பயந்து தம் மக்களைக் கொன்றுவிடுவதென்று சூரியனும் சந்திரனும் தீர்மானித்தன. ஒப்பந்தப்படி சூரியன் தன் குழந்தைகளை யெல்லாம் விழுங்கி விட்டான். சந்திரன் தந்திரசாலி—தன் குழந்தைகளை விழுங்கவில்லை. சூரியன் தன் குழந்தைகளை விழுங்கு மட்டும், சந்திரன் தன் குழந்தைகளை வானமண்டலத்திலே ஒளித்து வைத்திருந்ததாம்.

சூரியன் தன் குழந்தைகளை யெல்லாம் விழுங்கிய பிறகு சந்திரன் தன் குழந்தைகளை அழைத்ததாம். சந்திரன் குழந்தைகளைக்கண்டதும் சூரியனுக்கு அடங்காக் கோபம் வந்து விட்டது. உடனே சந்திரனைக் கொல்லும்படி சூரியன் பாய்ந்தது. சந்திரன் ஓட்டம் பிடித்தது. இரண்டும் நெடுநாள் ஓடின. சில சமயங்களில் சூரியன் சந்திரனை நெருங்கிவிடுமாம். அப்பொழுதுதான் கிரகணம் உண்டாகிறதாம்.

அதிகாலையில் சூரியன் தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை விழுங்குவதை நாம் எல்லாரும் பார்க்கிறோம். சந்திரனோ தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை பகற்பொழுதில் ஒளித்துவைக்கிறது; இரவு சூரியன் வெகு தூரத்தில் இருக்கையில் தன் குழந்தைகளை வெளியில் கொண்டுவருகிறது.

கிரகணங்கள்.

சூரியசந்திரகிரகணங்கள் எல்லாநாடுகளிலும் மிகவும்பயங்கரமான உற்பாதங்களாகவே கருதப்படுகின்றன. கிரகணங்கள் உண்டாவதற்கு பேய் பிசாசுகளும் பூதங்களுமே காரணமென்று பலஇடங்களில் நம்பப்படுகின்றன.

சூரியனையும் சந்திரனையும் விழுங்க முயலும் பூதங்களினாலே சூரிய சந்திரகிரகணங்கள் தோன்றுவதாக சீனர்கள் நம்புகின்றனர். எனவேகிரகணகாலத்து பூதங்களை வெருட்டியோட்டும் பொருட்டு தப்பட்டைகளையும் கொப்பரைகளையும் அடித்து சப்த முண்டாக்குவார்களாம். இந்தியாவிலும் கிரகண காலங்களில் மணியடிப்பதுண்டு.

பெரிய நாய்கள் சந்திரனை விரட்டுவதினாலேயே சந்திரகிரகணம் உண்டாவதாக அமெரிக்க சுதேசிகள் நம்புகிறார்கள். வெண்ணிலா சிவப்பாகும்வரை நாய்கள் சந்திரனை விரட்டு

பேய் ஓட்டல்.

(ப. ஜகந்நாதன். மோகனூர்)

ஒரு குடும்பத்தில் ஒரு பெண் தன் மூளையினுடைய பேதத்தாலோ அல்லது மற்ற தேக நலிவாலோ நோயுற்று இருந்தால் பல பெண்கள் தங்கள் மத்தியானச் சாப்பாட்டை முடித்து விட்டு ஒருங்கே சூழ்ந்து வம்பர் மகாசபை யென்னும் கமிட்டியைக் கூட்டித் தங்கள் வாய்க்கு வந்தவாறு சம்பாஷிப்பார்கள். இப்படியிருக்கையில் சுந்தரம் என்ற பெண் நாகரத்தினத்தைப் பார்த்து "ஏண்டி! நாகு, பாரடி! நம்ப செல்லத்துக்கு இரண்டு, மூணு நாலு நாளா உடம்பு நல்லாலே. நடு சாமத்தில் உளர்ரா. பல்லை நெறு நெறுண்ணு கடிக்கிறா. என்னாடியது ஒன்ணுந் தெரியிலே!"

நாகரத்தினம்:—ஆமாடி! எனக்குக்கூடத்தெரியுது. அது ஏதாச்சும் காத்துக் கருப்புக் குணமாத்தானாருக்கு.

சுந்தரம்:—ஆமா அதுக்கு ஒண்ணுஞ் செய்ரதில்லையா?

நாக:—செய்யுணு. காட்டேரயக் கோயிலுக்குத் தாங்கி கூட்டிக்கிட்டுப் போரதாகச் சொன்னாங்க. புள்ளத்தாச்சியா

மாம். நாய்கள் கடித்த காயங்களிலிருந்து இரத்தம் வடிவதனாலேயே விடியற் காலையில் வானமண்டலத்தில் சிவப்பு வர்ணம் தோன்றுகிறதாம்.

பின்னால் வரப்போகும் துன்பங்களுக்கு சூரிய சந்திர கிரகணங்கள் அறிகுறியென்று மிகச்சமீபகாலம்வரை ஐரோப்பியாகளும் நம்பி யிருந்தார்கள்.

அறிவு விளக்கம் பெற்று நாகரிக மடையாத தேசங்களில் எல்லாம் குருட்டு நம்பிக்கைகளும் கட்டுக்கதைகளும் இருந்தே வந்திருக்கின்றன. விஞ்ஞான சாஸ்திரம் விருத்தியடைய அடையக் கட்டுக்கதைகளும் குருட்டு நம்பிக்கைளும் ஒழிந்து விடுகின்றன.

யிருக்கிறான்னு பூச்சாரியைக் கூட்டியாந்து வீட்டிலேயே பேய் ஓட்டலான்னு இருக்காங்க.

இப்படிப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட நோயுற்ற மாது தனக்குப் பேய்பிடித்திருப்பதாகப் பிறர் நன்றாக அறியும்படி பல்லை நெறிப்பதும் தாறுமாறாய் உளறுவதுமாயிருந்தாள் இப்படியிருக்க அந்தக் குடும்பத்தலைவன் பேயோட்டும் பூசாரியிடஞ்சென்று; "அடே பூசாரி பெரியண்ணா! நம்ப புள்ளைக்கு இன்னைக்கு பேயோட்டணு."

பூசாரி:—அதுக்கென்னங்க! எப்பேர்ப்பட்ட கோட்டை முனியப்பன, ஆகாசக்கருப்பு, சுடலைக்கருப்பு, மகாமுனி எதாயிருந்தாலும் சொன்னாசொன்னபுடி கேக்கணுங்க. "சரி, இன்றைகு ஓட்டலாமென்று" அப்பெண்ணின் தகப்பன் சொன்னான்.

பூசாரி.—சரிங்க. அப்படின்னா, மதுரைவீர சாமிக்குப் பூசை போடணு. அதுக்காக சாராயத்திற்கு ஒரு ரூபாயும் கள்ளுக்கு எட்டணாவுங் கொடுங்க?

சரி வாங்கிக்கொள் என்று அந்தக் குடும்பத்தலைவன், 1½ ரூபாயிக்கு 2 ரூபாயாகக் கொடுத்தான். பிறகு பூசாரி தன்னைச் சேர்ந்தவர்களோடு நன்றாய்க் குடித்து விட்டு உடுக்கைகள் எடுத்துக் கொண்டு அப்பெண்ணின் வீட்டிற்கு வந்து அப்பெண்ணை வெள்ளைப் புடவை யணியச்செய்து குளிர்ந்த நீரால் குளிப்பாட்டி மத்தியில்உட்காரவைத்துச்சுற்றிலும் பூசாரிகள் உட்கார்ந்து பாட்டுச் சொல்லி உடுக்கையடிக்கிறார்கள்.

"அட மாசி பெரியண்ணா! நீ வந்துதவு இக்கோம்! ஓடாத பேயையெல்லாம், நீ ஓட்டிவைய்யி யிங்கோம்! போகாத பேயையெல்லாம், நீ போக்கி வைய்யி யிங்கோம்! இரட்டைக்கிடா, இரட்டைப் பொங்கல், இட்டிடுவேன்காணுனக்கு" என்று பாட்டுப்பாடி யடிக்கிறான். சுமார் கால்மணி நேரம் இப்படியடித்து அந்தப்பெண் தன் தலையை அசைக்காமலோ பேசாமலோ இருந்தால் இப்பூசாரி ஓ! என்று பெருத்த கூரலாற்கத்தி அப்பெண்ணையும் அவ்வாறு கத்தும்படி செய்கிறான்.

"அடே நீ ஓங்காரம்போட்டு நல்ல ஓயிலழகா வந்துவிடு, அடே சிங்கார நீ யிப்போ, சீக்கிரமாய் வந்து விடு. அடே

ஆங்காரங் கொள்ளாதே, நான் ஆக்கினைகள் செய்திடுவேன். அடே பரங்காக வுன்பேரைப் பகர்ந்துவிடு நீயிப்போ'' என்று சொல்லி உடுக்கையடித்துக்கொண்டு மறுபடியும் ஓ! வென்று கத்தி அப்பெண்ணையும் கத்தும்படி செய்கிறான். மறுபடியும் அந்தப்பெண் பேசாமலிருந்தால் காஞ்சுரட்டைச் தலையின் தூள் கலந்த விபூதியை அவள் மேல் பூசிவிடுவான். உடனேயந்தப் பெண், எரியுதே! அய்யோ எரியுதே! என்று பூசாரி சொன்னபடியெல்லாம கேட்கிறேனென்று அலறுவாள். உடனே பூசாரி ஆ! சொரூபக் தெருஞ்சுதா! வா சீக்கிரம் என்று ஓ வென்று ஓங்காரம் போடச் சொல்வான். அவளும் அப்படியே ஓ! வென்று கத்துவாள். ஓ! வென்ற சத்தந் தான் பேய் வந்ததற் கறிகுறியாம்.

பூசாரி:—''உன் ஊருமென்ன? பேருமென்ன, உன் உற்றார்கள் பேருமென்ன? சாதி சமயமென்ன? சண்டாளா நீ சொல்லி விடு?''

பெண்:—''என் ஊருந் தெரியாது. பேருந் தெரியாது சாதி சமயமில்லை, சண்டாள பூசாரி!''

பூசாரி:— உம்; சொல்ல மாட்டயா? (என்று பக்கத்திலிருந்த எருக்கிலை மாற்றால் அப்பெண்ணை யடிக்கிறான்.) என் செய்வாள்! பாவம் ஏதாவதொன்றைச் சொல்லித்தான் தீரவேண்டும்.

பூசாரி.—உம்! உன்சாதி, பேர், ஊர் முதலியவைகளைச் சொல்?

பெண்·—''ஊலரயுஞ் சொல்வதற்குள், உண்டிட எந்தனுக்கு போரன நல்ல வெல்லம், பெரியதொரு தேங்காயும்'' உடனே பூசாரி பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்து, அம்மா! இராசி புரத்திலிருந்து வந்த பத்து அச்சு வெல்லமும், இரண்டு மூன்று தேங்காயும் கொண்டு வாருங்கள் என்கின்றான்: உடனே கேட்ட பதார்த்தங்களைக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். இப்பெண் சாப்பிடுகிறாள். அப்பொழுது பக்கத்திலிருந்த மூட ஜனங்கள், ஆயாடீ! உசிராயிருக்கிலே நல்லா வெல்லமுந் தேங்காயுந் தின்னவனாட்டயிருக்குது. எப்படியோ தின்னாட்டுனாலும் பேரைச் சொன்னாப் பரவால்லே என்று பேசுகிறார்கள்.

பூசாரி:—"உன் ஜாதி யென்ன" ?

பேய் பிடித்த பெண்.— "பிறக்கும்போது பிராமணன். பிழைக்கும்போது கிறிஸ்துவன்"

பூசாரி:—"உன் பேர், ஊர் என்றதைச் சேர்த்துப்படி" ?

பெண்:—"பேர், ஊர் இவைகளைச் சொல்" ;

பூ:—"ஓஹோ பெருரா ! சரி உன் பேரென்ன ?

பெண்:—"முதலில் சேஷய்யர் பிறகு டேவிட்பால்"

பூசா:—"இந்தப் பெண்ணாளைப் பிடித்து எத்தனை மாதங்களாயிற்று ?"

பெண்:—"எத்தனை வேதங்களோ, அத்தனை மாதங்களாயிற்று"

பூசா;—"இந்தப் பொண்ணாளை யெப்படிப்புடுச்சே?"

பெண்:—இந்தப் பொண்ணா காவலடியான் கோவிலுக்குப் போய்விட்டு அங்கே சமைத்த கறிக்குழம்பு கொண்டு வருகையில் பூனைமாதிரி பிடித்தேன். அப்பொழுதே இந்தப் பொண்ணா காய்ச்சல் படுத்தாள்

பூசா:—(அந்தப் பெண்ணின் தாயை நோக்கி) "ஏம்மா காய்ச்சல் படுத்தது வாஸ்துவந்தானா ?" தாய் ஆம் என்று சொன்னாள்.

பூசாரி: —"சரி உன் ஊர், பேர் உண்மையானால் நான் குறித்தவற்றை யெடு" என்று பக்கத்திலிருந்த மணி, தேங்காய், விபூதித்தட்டு மூன்றையும் அப்பெண் முன் வைக்கிறான். அவள் ஏதோ ஒன்றையெடுக்க, அப் பூசாரி ஆ! குறித்ததை எடுத்தாய் என்று அப்பெண்ணின் மயிரைக் கொஞ்சம் கத்தரித்து அப்பெண்ணின் தலைமேல் ஒரு பெரிய கல்லைத் தூக்கி வைத்துக்கொண்டு ஒரு பெரிய வேப்பமரத்தை நோக்கிச் சென்று, அந்த மரத்தில் அந்த மயிரை வைத்து ஒரு ஆணி அறைந்துவிடுவான். பேய் அந்த ஆணியில் கட்டுப் பட்டதாம்! என்ன மூடத்தனம்.

ஓய்! மூடப்பூசாரிகளே! மூட ஜனங்களே! பேயென்பது என்ன வென்று உங்களுக்குத் தெரியுமா? அது சொல்லா

பொருளா? குணமா, குணியா? ரூபமா, அரூபமா? என்கிறத் தது? எத்தகையது? எக்குணத்தது? எப்பிரமாணத்தது? அல்லது ஒரு கற்பனைச் சொல்லா? இதை ஆராயாமல் அரூப மான பேய் பெண்ணைப் பிடித்ததென்று மூடத்தனமாக சகோதரிகள் என்று பாவிக்காமல் அவர்கள் முதுகில் தழும் பாகும்படி யடித்தல் உங்களுக்கு என்ன மானுஷீகம்?

பேயோட்டும் மாயப்பூசாரிகளே! கைக் கறுப்பையும், காளியையும் வசியப்படுத்தி வைத்திருக்கும் கனம் தங்கிய சாமியார்களே! பில்லி, சூனியம், செய்வினை செய்து கொல் லுவேன என்று பாமர ஜனங்களை மிரட்டும் திருட்டுப் பயல் களே! உங்கள் ஜபம் இனிமேல் பலிக்காது. இன்னும் உங் களையும், உங்கள் கொள்கைகளையும் அடியோடு அழிக்கக் காலம் வரவில்லை போலும்!

இப்படியெல்லாம் பாமர ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறித்துப் பிழைப்பதை விடக் கிண்ணியை வைத்துத் திண் ணையில உட்கார்ந்து கண்ணியமாய்க் காலங்கழிக்கலாமே! பேய் என்றும், கள்ளியங்காட்டுக் கருப்பணன் என்றும், மகா முனி என்றும் சொல்லிப் பாமர ஜனங்களின் மனதாகிய நிலத் தில் இக்கற்பனா சொற்களேற்படும் அச்சம் என்ற வித்தை விதைத்து முட நம்பிக்கையென்ற மரம் வளர, அறியாமையா கிய தண்ணீரை யேன் ஊற்றி வளர்க்கின்றீர்கள்? இனிமே லாகிலும் மூடநம்பிக்கை யென்ற மரத்தின் கிளைகளைப்பகுத் தறிவு என்னும் வளாற் சிதைத்து ஆராய்ச்சி யென்னும் மண் வெட்டியால் மூட நம்பிக்கை யென்ற மரத்தின் ஆணிவேரை அடியோடு அழியுங்கள்.

"எது வரையிலும் இந்து சமூகத்தின் ஆசாரப் புரட்டு களை மாற்றவில்லையோ, அதுவரையிலும் விடுதலைப் பேச்சும் புரட்டானதேயாகும். நான் எப்பொழுதும் இந்த அபிப்பிராய முடையவனாக இருந்த போதிலும், சென்னையைப் பார்த்த பின் இந்த எண்ணம் உறுதிப்பட்டு விட்டது.

(லாலலாஜபதி)

தமிழர்களுக்குக் கற்பில்லையா?

தோழர் மு. இராகவையங்கார் தவறு

(பண்டிதை ஞானாம்பாள்.)

"தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி" என்னும் நூலில் உண்மைக்கு மாறாக அதன் ஆசிரியர் தோழர் மு. இராகவய்யங்கார் வரைந்துள்ள விஷயங்களைத் தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார், தோழர் வெங்கடசாமி நாட்டார் ஆகிய தமிழ்ப்பேராசிரியர்கள் கண்டித்துப் பேசியுள்ளதைப் பத்திரிகைகளில் பார்த்தபோது திடுக்கிட்டேன். நூலைக் கையில் எடுத்து 8 முதல் 13 பக்கங்கள் முடிய வாசித்துப் பார்த்தேன். அதில் ஐயங்காரின் அயோக்கியத்தனம்-பார்ப்பனக் குறும்பு-நன்கு புலனாயிற்று. மீண்டும் தொல்காப்பியச் சூத்திரங்களையும் நச்சினார்க்கினியர் உரையையும் படித்தேன். நச்சினார்க்கினியன் வடிகட்டிய அயோக்கியன். தமிழர் பழக்க வழக்கங்களே இன்னவை என்றறியாமல்—வேண்டுமென்றே அநாவசியமாகவெல்லாம் மாற்றியும், திருத்தியும், வலிந்தும் பொருள் கூறும் வழக்கமுடையவன். அவன் உரையும் பொருந்தாது என்று தோழர் மு. இராகவையங்கார் சில சூத்திரங்கட்குத் தங்களுக்குச் சாதகமான முறையில் உணரக் காண்கிறார். இதைப் படிக்கும்போது தமிழர் உள்ளம் கொதிக்கும் என்பதில் ஐயம் இல்லை. இங்ஙனம் இந்தத் தோழர் மு. இராகவையங்கார் செய்யும் கொடுமைகள் பல. முதலில் "வேளிர் வரலாறு" என்று ஒரு நூல் எழுதி, அதில் "வேளிர் என்போர் தமிழர் அல்லர்; வடநாட்டில் 'கண்ணன்' உடனிருந்து 18 குடி மக்கள் வந்து தமிழ் நாட்டில் தங்கினர்; அவரே 'வேளிர்' எனப்பட்டனர்" எனக் கதைக் கட்டி விட்டார். அதைக் கண்டு வயிறு எரிந்த பண்டித ந. மு. வெங்கடசாமி நாட்டார் 1915-ல் "வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி" என்ற மறுப்புரை நூலில் ஐயங்காரது ஆணவத்துக்கு ஆப்பு அறைந்தார்கள். அத்துடன் நில்லாமல், ஐயங்கார் "நக்கீரர் பிராமணகுலத்தவர்" என்று 'செந்தமிழ்'ப் பத்திரிகையில் வால் நீட்டினார். தமிழ்த் தாயின் தவப்புதல்வராகிய தோழர் ந.மு. வே. நாட்டார் அவர்கள் தாம் எழுதிய "நக்கீரர்" என்ற நூலில் ஐயங்காருக்கு மறுப்பு அறைந்து "நக்கீரர் பார்ப்பனர் அல்லர்" என்பதை மெய்ப்பித்துக் காட்டினார். பின்னர் ஐயங்கார் "சேரர் தாயமுறை" என்று செந்தமிழில் ஆராய்ச்சி ஒன்று வரைந்தார்; தமிழ்ப்பேராசிரியரும் மதுரை வழக்கறிஞருமாகிய தோழர் சோமசுந்தர பாரதியார்

எம். ஏ. பி. எல்., அதனை மறுத்து "மருமக்கள் தாயமுறை" என்று நீண்டதோர் வியாசம் வரைந்து முடித்தார்.

இவற்றால் நாமறிவதென்ன இந்த ஐயங்கார் எப்போதும் உண்மைக்கு மாறாகவும், எல்லாம் ஆரியத்தி லிருந்தே வந்தது-வேனிர் ஆரியர் (சில நாட்களில் சேர சோழ பாண்டியரும் கூட ஆரியர் என்றே சாதிப்பாரோ? என்ற அச்சம் உண்டாகிறது) எல்லாத் தமிழ் நூல்களும் ஆரிய முதல் நூல்களைக் கொண்டே வரையப்பட்டவை. கூடுமான வரையில் தமிழ்ப் புலவர் பலர் பார்ப்பனர் என்று இம்மாதிரியான கேவல முறையில் ஆராய்ச்சிகள் செய்து முடிவுகட்டுவதே தமது குல தர்மமாகக் கொள்வாரெனின், இவரது புன்மை யறிவை என்னென்பது? இந்தக் காலத்தில் தட்டிக் கேட்கத் தமிழர் உள்ள இக்காலத்திலேயே இந்த அக்கிரமங்கள் தலை காட்டுகின்றன எனின், தட்டிக் கேட்க ஆளில்லா முற்காலத்தில் அகத்தியர்க்கு முற்பட்ட பண்டைத் தமிழ் நூல்களை, உண்மைத் தமிழ் நூல்களை இப்பார்ப்பனக் குழுவினரே எரித்து விட்டனர்; தமிழர் தங்கள் நாகரிகமும், பண்டைச் சிறப்பும் அறிந்துகொள்ளாத வரையில் நாம் நாட்டாண்மைக்காரராக இருப்போம் என்ற எண்ணத்தில் ஏன் செய்திருக்கக்கூடாது? "நூல்கள் கடலால் கொள்ளப்பட்டன என்று கதை கட்டி விட்டது முழுப் புரட்டு" என்பன நன்கு விளங்குகின்றன அல்லவா? இப்போது "தமிழர் மதம் எது? தமிழர் நாகரிகம் எது?" எனத் துணிய முடியா வகையில் இருப்பதற்குப் பாழும் சுயநலக் கூட்டத்தினரே காரணம் என்பதில் வியப்பென்ன? இது நிற்க;

"தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி"யில் "நினைத்தவன் நினைத்தவளைக் கொண்டு சென்று கூடி ஒழுகும் இராக்கத முறை போன்ற ஒன்று அக்காலத்தே தமிழரால் கையாளப்பட்டது" என்றும், அம்முறை ஆரிய மேலோரால் நீக்கப்பட்டுத் தூய "ஆரியர் கற்பியல் முறை" தமிழர்க்குப் போதிக்கப்பட்டதென்றும் ஐயங்கார் கூறுகிறார். "தூய ஆரியர் கற்பியல் முறை" யாது? ஆராய்வோம்.

ஆரியர் கற்பியல் முறை யாது?

சிந்து நதிக்கரையில் ஆரியப்பெண்கள் கால்சட்டை போட்டிருந்தனரே—அது கற்பியல் முறையா? ஒருத்தியை ஐந்து பேர் கூடி ஒழுகினரே பாரதத்தில்-அது கற்பியல் முறையா? மச்சகந்தியைப் பராசன் கன்னிப் பருவத்திலேயே ஓடத்தில் புணர்ந்தது கற்பியல் முறையா? குந்தியைக் கன்னிப் பருவத்திலேயே சூரியன் புணர்ந்தது கற்பியல் முறையா?

பாண்டுவின் ஏவலால் குந்தி மூன்று வேறு புருடர்களைப் புணர்ந்து பிள்ளைகளைப் பெற்றது கற்பியல் முறையா? மாத்திரை அஸ்வனிகளைப் புணர்ந்து நகுல சகாதேவரைப் பெற்றது கற்பியல் முறையா? அம்பா அம்பாலிகை விதவைகளாகிப் பின் வியாசனைப் புணர்ந்து திருதாட்டிரனையும், பாண்டுவையும் பெற்றது ஆரியர் கற்பியல் முறையா? துரியோதனன் பல்லோர் அவையில் துரோபதையை நிர்வாணமாக்கியது ஆரியர் கற்பியல் முறையா? படுக்கையறை இருக்க ஆயுத அறையில் அவசர அவசரமாகத் தருமன் துரோபதையைப் புணர்ந்தது கற்பியல் முறையா? அத்தச்சமயத்தில், அர்ச்சுனன் உள் நுழைந்தது கற்பியல் முறையா? அவனை ஒருவருடம் தீர்த்த யாத்திரை செய்யுமாறு ஏவியது ஆரியர் கற்பியல் முறையா? பாண்டவரை மணந்தபின்னர் கன்னனையும் காதலிப்பதாகக் கூறிய துரோபதையின் முறை ஆரியர் கற்பியல் முறையா? விதவைப் பெண் நான்கு புருடர்களோடு 'நியோகம்' செய்து ஒவ்வொருவர்க்கும் இரண்டிரண்டு குழந்தைகளைப் பெறலாம். என்று கூறும் ரிக்வேதம் ஆரியர் கற்பியல் முறையா? 'மேல் வருணத்தைச் சேர்ந்த ஆடவருடன் தான் பெண்கள் கூட (நியோகம் செய்து கொள்ள) வேண்டும்' என்று அயோக்கியத்தனமாகக் கூறும் ரிக்வேத ஸ்லோகம் ஆரியர் கற்பியல் முறையா? 'விவாகப் புருடனுக்குச் சமமாகவே நியோகப் புருடனையும் பாவித்து விதவையானவள் குழந்தைகளைப் பெறட்டும்'' என்று கூறும் ரிக்வேத வாக்கியம் ஆரியர் கற்பியல் முறையா? துரோணன் மனைவியை நிர்வாணமாக வந்து அமுதிடச் செய்து அதைக்கண்டு வீரியம் ஒழுகவிடுதல் ஆரியர் கற்பியல் முறையா? நாரதர் ஆசைப்பட்டுப் பெண் வேடம் போட்டுக் கொள்ள அவன் மீது மட்டத்தனமாக வெறி கொண்டு அவனைப் (பின்னால்) புணர்ந்த திருமால் செயல் ஆரியர் கற்பியல் முறையா? ''நியோகம் விரும்பும் பெண், குறியில் நெய் தடவிக்கொண்டு பிற புருடரைப் புணரலாம், தோஷம் இல்லை'' என்று கூறும் வேத சூத்திரம் ஆரியர் கற்பியல் முறையா? துரைகளுக்கும், பணக்காரப் பார்ப்பனரல்லாதார்க்கும் பெண்களையும், மனைவிகளையும் தமக்கைகளையும், தங்கைகளையும், இவர்கள் இல்லாதபோது தங்களையும் அடிமைப்படுத்தும் இக்காலச் சுயநலக் கூட்டத்தார் வழக்கம் ஆரியர் கற்பியல் முறையா? ''குழந்தைகளைப் பெற விருப்பமில்லாத காலத்திலே பெரிய சகோதரன் மனைவியுடன் சிறியவனும், சிறிய சகோதரன் மனைவியுடன் பெரியவனும் நியோகம் செய்து கொள்ளலாம்'' என்று மனுஸ்மிருதி கூறுவது ஆரியர் கற்பியல் முறையா? ''பெண்ணே, முதலில் உன்னை மனைவியாக மணக்கும் புருஷனின் பெமர் பெயர் ''சோமன்''; இரண்டாம் முறை உன்னை நியோகத்தால் அடைபவன் பெயர் ''கந்தர்வன்'' மூன்றாவதாக உன்னை

அடைபவன் பெயர் 'அக்கினி'; நான்காவதிலிருந்து 11-வது வரை உனை அடைபவர்கள் பெயர் "மனுஷ்யர்" என்று மானங்கெட்டுக் கூறும் ரிக்வேத சுலோகம் ஆரியர் கற்பியல் முறையா? "புருடன் மக்களைப் பெற திறமையில்லாதவனாகி விட்டபோது தன் மனைவியைப் பார்த்து ஏ சுந்தரீ! சௌபாக்கியத்தை விரும்பும் நீ மற்றோர் புருடனை நேசித்துக்கொள். ஏனென்றால் இனிமேல் குழந்தைகளை அளிக்க முடியாது" என்று கூறுவதாகச் சொல்லும் ரிக்வேத சுலோகம் ஆரியர் கற்பியல் முறையா? 'விவாகம் செய்துகொண்ட புருடன் தர்மத்தின் காரியத்தின் பொருட்டு அன்னிய தேசம் சென்றவனாயின் அவன் வரவுக்கு 8-வருடமும், வித்யா கீர்த்திகளுக்காகப் போனானாயின் 6 வருடங்களும், பணம் சம்பாதிக்கப் போனானாயின் வருட 3-மும் காத்திருந்துபிறகு மற்றோர் புருஷனுடன் நியோகம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெறலாம்" என்று மனுஸ்மிருதி கூறுவது ஆரிய மேலோர் கற்பியல் முறையா? "இத்யாதி பிரமாணங்களாலும், யுக்திகளாலும், நியோகத்தாலும் தங்கள் தங்கள் குலத்தை விருத்தி செய்ய வேண்டும்" என்று கூறும் மனுஸ்மிருதியின் கூற்று ஆரிய மேலோர் கற்பியல் முறையா?

இவற்றுள் ஒன்றையேனும் இப்போதுள்ள சங்க நூல்களில் காட்ட இயலுமா? ஆரியர் மேலோர் இவற்றைத் தமிழர்க்கு விதித்தனர் என்றால் ஒன்றுக்காவது இலக்கியம் இருக்க வேண்டுமல்லவா? ஐயங்கார் மூளையில் இது படாததற்குக் காரணமென்ன? மானங்கெட்ட—வெட்கம் கெட்ட— பேடித்தனமான— நீசத்தனமான— அமானுஷீகத்தனமான கொடிய ஆரியர் கற்பியல் முறைகளைத்தமிழர்க்கு ஆரிய மேலார் (கீழோர் என்பதே பொருந்தும்) நன்கு விதித்துப் போந்தனர் என்னும் ஐயங்காரது அகம்பாவ—பொய்யான கூற்று, தமிழர் உயிரையே வாங்குவதாகவன்றோ இருக்கிறது? தன் மனைவியின் நடத்தையில் சிறிது ஐயம் தோன்றினும் அக்கணமே அவளை உயிர் வாங்குவது குறவன்—மறவன் முதலிய பழந்தமிழர் வழக்கமென்பதைப் பத்திரிகை வாசிப்பவர் இன்றும் காணலாமெனில், தமிழரது ஒப்புயர்வற்ற கற்பியல் முறை இத்தன்மைத்தென நன்கு விளங்கவில்லையா? இத்தகைய தீய ஒழுக்கமும் கற்பியல் முறையுங்கொண்ட தமிழர்க்கு, ஒழுக்கமும், கற்பியல் முறையுமை சிறிதும் அறியாத ஆரியர் 'கற்பியல் முறை' நன்கு விதித்துப் போந்தனர் என்பது வடிகட்டிய அயோக்கியத் தனம் அல்லவா?

தமிழ் பெண்கள் அவ்வளவு கேவலமாகவா ஐயங்கார் கண்களுக்குத் தோற்றுகிறார்கள்? அவர்கள் "வாலிபரோடு சேர்ந்து பாடுவதில்லை; வந்

அரக்கர்கள் யார்?

நமது இதிகாச புராணங்களில் எங்கு தொட்டாலும் தேவர்களும் அசுரர்களுமாகவே இருக்கிறார்கள். தேவாசுரர்கள் இல்லாவிட்டால் புராணம் இல்லை; இதிகாசங்கள் புராணங்களென்னும் மூட்டைகளுமில்லாமற் போய்விடும். எங்கு பார்த்தாலும் இவர்களுடைய சண்டைகள் தான் நிறைந்திருக்கின்றன. தேவர்கள் ஒரு பக்கமும், அசுரர்கள் ஒரு பக்கமும் இருந்து சண்டை போடுவதே வழக்கம். ஞானம், தவம், கல்வி, பராக்கிரமம் நீதி முதலிய நற்குணங்களிற் சிறந்த அசு

தே மாதாம் போடுவதில்லை; சென்னைக்கடற்கரையில் இரவு 12 மணிக்குக்கண்ட புருடருடன் கூடிக்குலாவுவதில்லை; பகலெல்லாம் தேசபக்தி- இரவெல்லாம் நியோக பக்தி கொண்டிருப்பதில்லை; 'பதி—பக்தி' ஒன்று தான் அறிவார்கள்: கோவில்கட்குச் சென்று தாமாக ஆடவர்க்கு முன் வந்து நெருக்கத்தில் அகப்படுவதில்லை, ஆடவர் இடிசலை அவாவுதில்லை; 'என்ன இருந்தாலும் சூத்திராள் வேலையில் கெட்டிக் காரர்' என்று சர்டிபிக்கெட் கொடுப்பது மில்லை; ரிக்ஷாவில் தனித் தனியாக இராக் காலங்களில் சுற்றுவதில்லை; பொதுவாகத் தமிழர் மானத்தையும், சிறப்பாகத் தமிழ்ப்பெண்கள் மானத்தையும் அழிக்க முயன்றுவரும் இத் "தொலகாப்பியப் பொருள் அதிகார ஆராய்ச்சி"; என்னும் தமிழர் துரோக நூலை உடனே பறிமுதல் செய்யும்படி அரசாங்கத்தாரையும், உண்மைத் தமிழராகிய கனம் பி. டி. ராஜன் அவர்களையும், திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்களையும். தமிழ்ப் பெண்கள் சார்பாக நான் வேண்டிக் கொள்கிறேன். அதனை வித்துவான் பரீக்ஷைப் பாடநூல் தொகுதியிலிருந்து நீக்கி விடுமாறு சென்னைச் சர்வகலாசாலை வைஸ் சான்ஸலரையும் வேண்டுகின்றேன். தமிழர் மானத்தைக் காக்கும் இத்துறையில் தமிழர், தமிழ் நாடெங்கும் பெருங் கிளர்ச்சி செய்வார்களாக.

இவ்விஷயம் குடியரசில் வெளியிட்டிருந்தாலும் இது ஒரு முக்கியமான விஷயமானதால் புத்தக ரூபத்தில் இருக்க வேண்டுமென்றே பகுத்திவிலும் பிரசுரிக்கிறோம்.

ரர்கள் இந்திராதி தேவர்களை எதிர்த்து வெற்றி பெற்றவுடன் தேவர்கள் திரிமூர்த்திகளையடுத்து முறையிட்டுக் கொள்ளுவதும், கடைசியில் மகாவிஷ்ணு அசுரர்களைத் தாக்கி வதைத்து தேவர்களை ஆதரிப்பதும் சாதாரணம். இப்படி ஓயாமல் இந்த இரண்டு கூட்டத்தார்களுக்கும் எப்போதும் சண்டை. இந்தச் சண்டை வேதம் பிறந்த நாள் முதற்கொண்டிருந்ததாகையால் வடமொழியிலுள்ள சமய நூல்களிலெல்லாம் இவர்களுடைய சண்டைகள் தான் விசேஷமாக நிறைந்திருக்கின்றன. ஆனால் தேவர்கள் மேற்படி நூல்களை எழுதிய ஆரியர்களால் தெய்வங்களாகக் கொண்டாடப் பட்டவர்களானபடியால் கடைசியில் எல்லா அசுரர்களும் தேவர்களிடம் போர்செய்து தோற்றுப் போகிறார்கள். தனக்கு இயற்கையாயமைந்த சூழ்ச்சி, தந்திரம், மோசம் என்னும் இவை போன்ற உபாயங்களால் மகாவிஷ்ணு அசுரர்களை அனேக விதங்களில் வஞ்சித்தும் வதைத்தும் கொல்லுகிறான். இந்தச் சண்டைகளை கவனித்துப் பார்க்கையில் இது வேத காலத்துக்கு முந்தியதென்றே சொல்ல வேண்டும். ரிக்வேதத்திலேயே இந்தச் சண்டைகளைப்பற்றிய கதைகள் எழுதப் பட்டிருக்கின்றனவாகையால் வேதங்கள் எழுதத் தொடங்கின காலத்துக்கு முந்தியே தேவாசுர யுத்தங்கள் சாதாரணமாக இருந்திருக்க வேண்டுமென்பது ஸ்பஷ்டமான சமாச்சாரம்.

அசுரர்களைத் தான் வடமொழியில் இராட்சதர்களென்றும், தமிழில அரக்கர்களென்றும், இன்னும் பல பேர்களாலும் வழங்கி வந்தார்கள். அசுரர்கள் நமது புராணங்கள் கூறுகிறபடிக்கே மகத்தான தவங்களைச் செய்ய வல்லவர்கள், மிகுந்த ஞானத்தையுடையவர்கள், வேத சாஸ்திரங்களில் நிபுணர்கள், நாகரிகத்திற் சிறந்தவர்கள். ஆயினும் இவர்களைப் பொதுவில வருணிக்கும் போது இவர்களைச் சைவர்களாகவும், கருத்தமேனி, விகாரமான சரீரம் முதலியவைகளோடு கொடூரமான செயல், அகங்காரம், மூர்க்கம், குரூர சிந்தை முதலியவைகளை உடையவர்களாயிருந்தவர்களாகவும் ஆரியர் நூல்களில் வரைந்திருக்கின்றார்கள். இது எம்மட்டுஞ்சரி, அல்லது ஒப்புக் கொள்ளக் கூடியதென்பதைப் பின்னால் விசாரிப்போம்.

மஹா விஷ்ணுவுக்கு க்ஷீராப்தியில் அநந்த சயனத்தில் ஸ்ரீ லட்சுமி சமேதராக ஏகாந்தத்தில் இன்பம் அநுபவிக்கும் க்ஷேமபோக மிகுதியாயுள்ள காலமெல்லாம் எவ்வித உபாயத்

தாலேனும் கொல்லுவதே வேலை. இவருக்குரிய தசாவதாரங்களில் ஒன்பது எடுத்தாயிற்றாம். அந்த ஒன்பதிலும் சிலர் புத்தரை ஒரு அவதாரமாகச் சேர்த்தும், சிலர் அவ்வாறு சேர்க்காமலும் சொல்லுகிறார்கள். வைதீகர்கள் சத்திய சொரூபியாகிய புத்தர் விஷயத்தில் செய்த அபராதத்துக்கு பிராயச்சித்தமாக இவரையும் விஷ்ணுவின் அவதாரமென்று சொன்னார் போலும்! அது எப்படியாயினும் மகாவிஷ்ணு எடுத்த மற்ற அவதாரங்களெல்லாம் அசுரர்களைத் தொலைப்பதற்காகவே எடுத்தான். இந்த அவதாரப் புரட்டுக் கதைகளை ஆரியர்களே கட்டி வைத்த போதிலும் அவைகளினின்றே சில அவதாரங்களிற் காணப்படும் அசுரர்களைப்பற்றி இப்போது சிறிது விசாரணை செய்வோம். முதலில் வாமனாவதாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். பலி என்பவன் மிகுந்த சத்ய சந்தன், கொடையில் நிகரற்றவன். பராக்கிரமத்திலும், வீரத்திலும் ஒருவருக்கும் குறைவு பட்டவனல்ல. அவனை வாமனாக வந்த விஷ்ணு வஞ்சித்து மூன்றடி மண் கேட்கிறான். அசுரர் குரு சுக்கிராச்சாரி கேட்பவன் இன்னானென உணர்ந்து "கொடாதே" என்று குறிப்பாற்றடுத்தும் தான் கொடுத்ததை மறுக்க மாட்டானென்று சொல்லி மூன்றாவதடிக்காக தலை கவிழ்ந்து கபடப் பிராமணன் காலால் நசுக்குண்டு சாகிறான். ஒரு வார்த்தைகூட எதிர்த்தாவது மறுத்தாவது பேசவில்லை. தன்னை அழிக்க வந்தவன் தன் குலத்தையே வேரோடு களைய வந்த நாராயணன் என்று தெரிந்தும் தன் வாக்கு எவ்விதத்திலும் தவறப்படாது என்று அமைதியோடு இறத்தலையே கடனாக ஏற்றுக்கொள்ளுகிறான். என்ன பெருந்தகைமை! என்ன மேம்பாடு! குள்ளப் பார்ப்பனனின் இழி தொழிலை இகழவும் வேண்டுமோ?

ஹிரண்ய கசிபையும் பிரகலாதனையும் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்ப்போம். ஹிரண்ய கசிபு பிரஹலாதனைப் பார்த்து "குழந்தாய் நீ ஒன்றும் உணராதவன். நாராயணன் நமது குலத்தையே நாசம் செய்வதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். அவனால் நமது குலம் முழுவதும அழிந்து வருகிறது; நமது குலத்திற் பிறந்து நமது குலத்தைப் பகைவர்களுடைய அதர்ம சூழ்ச்சிகளிலிருந்து காப்பாற்றுவதை தர்மமாகக் கையாளாமல் நீயே அவனை ஸ்வாமி என்று நமஸ்கரிப்பது தகுமா" என்று பல தடவைகளிலும் பலரைக் கொண்டும் புத்தி புகட்டுகிறான். பிரஹலாதன் தன் தந்தையை அவமதித்தும் அலட்சித்தும் பேசினதுமல்லாமல் ஒரே மூர்க்கத் தன

மாகத் தகப்பன் எதிரிலேயே நாராயணனைப் புகழ்கிறான் இந்த மாதிரிப் பிள்ளையால் தன் குலத்துக்கே பழியும் பாவமும் உண்டாகுமே என்று பலவாறு துக்கிக்கிறான் பிதா. கடைசியில் ஹிரண்யகசிபு தூணை உடைத்தபோது நரசிம்ம விஷ்ணு தோன்றி அவனுடைய உடலைச் சின்னாபின்னமாகக் கடித்துங் கிழித்தும் வதைக்கிறான். தகப்பனாற் பெரிதும் பாராட்டப்பெற்ற பிரகலாதனோ கொடிய பகைவனாகிய விஷ்ணு செய்யும் குரூரச் செய்கைகளைக் கண்கூடாகப் பார்த்தும் கொஞ்சங் கூட பிதுர் பக்தி, இரக்கம், துக்கம், சோகம், ஒன்றும் இல்லாமல் விஷ்ணுவையே மோட்சத்தை ஆஸ்ரயித்துக் கை கூப்பி வணங்குகிறான். இவ்வளவு கொடிய பிள்ளை அரக்கர் குலத்தில் எப்படிப் பிறந்ததென்று ஆச்சரியப் படும்படி நடந்து கொள்ளுகிறான். இந்தத் துஷ்டனையும் ஆரியர் மதப்பித்தால் "ஆழ்வான்" என்று போற்றி ஆராதித்து வருகிறார்கள். என்ன மடமை!

"பிரஹலாதனைப் பற்றி எழுதும்போது இன்னொரு "ஆழ்வான" மகிமை ஞாபகத்துக்கு வருகிறது. அவன் தான் நமது இராவணன் தம்பி விபீஷணன். அண்ணனுடைய இரகசியங்களையெல்லாம் திருட்டுத்தனமாக இராமனுக்குச் சொல்லிக் கொடுத்து அவனைக் கொல்லுஞ் சூழ்ச்சியைக் குறிப்பித்ததுமல்லாமல் இராமனால் அண்ணன் இறப்பதற்கு முந்தியே இலங்கைக்கு அரசனாக முடி சூட்டப்பட்ட மாபாவி! இராவணன தன் தம்பியாயிற்றே என்று இவனை நம்பி இவனிடத்தில் தனது உயிர்நிலை இரகசியத்தையும் கூட ஒன்றும் ஒளியாமற் சொல்லி வைத்திருந்தான். இந்த இரகசியங்களையெல்லாம் தன் எதிரிக்குச்சொல்லி தான் அரசனாக வாழலாம் என்று நினைத்த இந்த பொல்லாத் துரோகியையுங்கூட "ஆழ்வான்" என்றும் "சிரஞ்சீவி" என்றும் சொல்லித்திரிகிறார்கள் மதப்பித்தால் மதிமயங்கிய வைதீகர்கள். இந்த சகோதரத் துரோகியைச் காட்டிலும் இராவணன் எவ்வளவோ நல்லவன், அவன் சீதையைக் கற்பழிக்கக் கொண்டு போனான் என்பது பெரும்பழி. தன் தங்கையை அவமானஞ் செய்தவனைத் தண்டிப்பதற்காகச் சீதையைத் தூக்கிச் சென்றானே யொழிய வேறு கெட்ட இச்சையாலன்று. சீதையின் கற்பை அவன் கெடுக்க முயன்றால் அவன் எப்படியும் தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்திருக்கலாம். அவனைத் தடுக்க வல்லவர் ஒருவருமில்லை. அல்லது அவளுடைய கற்பை அவன் கெடுத்திருந்த போதிலும் அது அந்த காலத்து யுத்த

தர்மப்படி தவறும் ஆகாது. பழைய காலத்து யுத்தங்களில் தோற்றுப் போனவர்கள், பகைவர்கள் இவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளை எதிரிகள் தூக்கிக் கொண்டு போய் வரித்து கொள்ளுவது வழக்கமாயிருந்தது. சரித்திர ஆராய்ச்சியிற் சிறிது பழகியவர்களுக்கு இது ஆச்சரியமாகத் தோன்றாது. ஆதிகாலத்து ஆரியர்களுடைய வழக்கங்கள் எல்லாம் அவ்வளவு உயர்ந்தனவாகத் தோன்றவில்லை. இவர்களால் கற்பிலட்சணத்தின் திருஷ்டாந்தமாகப் போற்றப்படும் பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியாகிய திரௌபதி ஐந்து நாயகர்கள் போதாதென்று கர்ணன் மேல் கூட ஆசைப்பட்டாளாம். இவளைப் பாண்டவர்கள் சூதாடித் தோற்றபோது இவள் துகிலை இராஜசபையில் கௌரவர்கள் உரிந்த உரிமையைப்போன்றதுபோலும் பகைவேந்தன் பெண்ணைக் கவர்ந்து செல்வதும். இது பண்டை ஆரியர்களின் சமூகதர்மமாயிருக்கலாம். மேற்சொன்ன பஞ்ச கன்னிகைகளில் இந்தச் சீதையும் ஒருத்தி. மிகுந்த கன்னிகைகளில் இராவணன் பத்தினியாகிய மண்டோதரி தவிர மற்றவர்கள் கதையெல்லாம் இப்படியே தான் இருக்கிறது. இராட்சதன் சம்சாரமாக இருந்த போதிலும் மண்டோதரியை ஆரியர்கள் கூட கற்பு விஷயத்தில் மதித்து வருகிறார்களென்றால் ஆரியர்களுடைய நாகரீகத்தைக் காட்டிலும் இராட்சதர்களுடைய நாகரீகம் தோற்றதாகத் தோன்றவில்லை. ஆனபோதிலும் தேவபக்தர்களாகிய ஆரியர்கள் அவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்கள் மேலுள்ள துவேஷத்தால் அவர்களை இழிந்தவர்களெனப் பழித்தும், கொடியவர்களெனத் தூஷித்தும் வந்திருக்கிறார்களென்பது வெள்ளிடைக் குன்றுபோல் தெரிகிறது.

சிலர் அசுரர்களைச் சைவர்களென்றும், சிவபக்தியுள்ளவர்களென்றும் கருதி அவர்களுக்கும் தேவர்களுக்குமுள்ள பகைமையை சிவமதம் விஷ்ணு மதம் என்னும் இரண்டு மதங்களுக்குமுள்ள சுபாவ விரோதத்தின் ஒரு பகுதியென்று நினைக்கிறார்கள். அதாவது இராட்சதர்கள் சிவபக்தி, சிவஞானம் இவைகளிற் சிறந்தவர்களென்றும், ஆரியர்கள் விசேஷமாக விஷ்ணு பக்தியிற் சிறந்தவர்களென்றும், இந்த இரண்டு கட்சிக்காரர்களின் இயற்கையான பகைமையே தேவாசுர சண்டைகளுக்கு அடிப்படை என்றும் நினைக்கிறார்கள். இந்த வாதத்தில் கொஞ்சம் உண்மை இருப்பதாக நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதாக இருந்த போதிலும் பிராம்மண மதம் தவிர மற்ற மதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்களுக்கும்

அந்த மதத்தையே கொஞ்சம் ஆழ்ந்து படித்தவர்களுக்கும் இது அவ்வளவு பொருத்தமான கொள்கையாகத் தோன்ற வில்லை. ஏனெனில், மிகப் பழைய மதமாகிய பார்சி மதம் என்று சாதாரணமாகச் சொல்லப்படும் "சொரோஸ்டிரியன்" மதத்தைப்பற்றி நாம் விசாரிக்கும்போது தேவர்கள் அசுரர்களாகவும், அசுரர்கள் தேவர்களாகவும் முழுவதும் புரண்டு போகும் கண்கட்டு வித்தையைப் பிரத்தியக்ஷமாகப் பார்ப்போம். அதாவது நாம் எப்படி தேவர்களை உயர்த்தியும் அசுரர்களை இழித்தும் பேசுகிறோமோ அப்படியே பார்சிக்காரர்களும் தேவர்களை மிகவும் தாழ்த்தியும் அசுரர்களைப் பூஜித்தும் வந்திருக்கிறார்கள். இந்த ஆச்சரியமான விஷயத்தைப் பற்றிப் பின்னால் காரணத்தோடு விசாரிப்போம். அசுரர்கள் சிவபக்தியில் ஈடுபட்டுள்ளவர்கள்; ஆகையால் இவர்களுக்கும் சிவமதத்தைத் தழுவிய ஆரியர்கள் அல்லது வைதீகர்களுக்கும் ஒற்றுமை யுண்டென்று சொல்ல சிவமதமே கொஞ்சங்கூட இடங்கொடுக்க வில்லை. உதாரணமாக சிவமதத்தை ஸ்தாபிப்பதற்காகவே உலகத்தில் அவதரித்த பரம புருஷர்களாக நினைக்கப்படும்சமயாச்சாரியார்களுடையதேவாரதிருவாசகங்களை எடுத்துக்கொண்டால் அசுரர்கள் மேல் அவர்களுக்கு எவ்வளவு அசூயை இருந்ததென்று நன்றாய்த் தெரிய வரும். மேற்கோளாக ஞானசம்பந்தனுடைய தேவாரங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு பதிகததிலும் பதினொரு பாட்டுகள் உண்டு. பதினொராவது பாட்டுதன்சொந்த ஸ்துதி. அதாவது, சம்பந்தன் பாட்டைப் படிப்பவரெல்லோரும் மோட்சம் எய்துவார் என்று கூறும் தற்புகழ்ச்சி. பத்தாம்பாட்டில் தமிழைத் தாய்போற் போற்றி வளர்த்த சமணர்களையும், புத்தர்களையும் மிகவும் இழித்துக் கூறி வாய்க்கு வந்தபடி வைகிறான. ஒன்பதாம் பாட்டில் அரி பிரம்மர்களுக்கும் எட்டாத அநாதித் தெய்வம் என்று சிவனைப் புகழ்கிறான். எட்டாம் பாட்டில் இராவணன் செருக்கிக் கயிலையைத் தூக்கினதாயும், அப்போது பரமேஸ்வரன் வெகுண்டுகாலால் அழுத்தி அவன் கர்வத்தையொழித்ததாயும் அவனைப் பரிகசிக்கிறான். இப்படி இராவணனை அவமதித்துள்ள பாட்டுக்களை உற்று நோக்கும் போது சைவர்களுக்கு அசுரர்கள் மேல் இருந்த வெறுப்பு வெள்ளிடைக்குன்று போல் வெளிப்படுகிறது திருஷ்டாந்தமாக சம்பந்தனுடைய திருவாலவாய்த் தேவாரங்களிலிருந்து இராவணனை நிந்தித்துப் பாடிய சில அடிகளை மாத்திரம் கீழ் குறிப்போம்.

"தூர்த்தன் வீரந் தொலைத்தரு ளாலவா யத்தனே"

"இராவணன் றிண்டோளிருபது நெறிதர வூன்றி"

"அரக்கனார் வலி, நெருக்கன்"

"அர்க்கன்றான் கிரியேற்றவன்றன்

முடிச்செருக்கினைத் தவிர்த்தாய்"

"ஆற்றவாளரக்கற்கு மருளினாய்"

"மேலெனத் தெரியவில்லை யென்ற

வரக்கனார்மிகை செற்ற"

"துறையிலங்கை மன்னனைத் தொடா வூன்றினாய்" இவைகளிலிருந்து போதருவதென்னவென்றால் சைவர்களானாலும் வைஷ்ணவர்களானாலும் அசுரர்களை யிழித்துக் கூறுவதே அவர்களுக்குத் தொழில். நமக்குத் தேவர்களானாலும் அசுரர்களானாலும் ஒன்று தான். இவ்விருவர்களைப் பற்றியும் வாஸ்தவத்தில் நமக்குத் தெரிந்த சமாச்சாரம் பூஜ்யமே. புராணங்களிலும் வேதங்களிலுமுள்ள பொய் மூட்டைகளை ஆராய்ந்து அவைகளுக்குள் உயர்ந்தது எது? தாழ்ந்தது எது என்பதை ஆராயப்புகின் மணற் சோற்றில் கல்லாராய்வதை ஒக்கும். குதிரை முகத்தேவர்களும், குரங்கு முகத்தேவர்களும், சிங்க முகத்தேவர்களும், கரடி முகத்தேவர்களும், யானை முகத்தேவர்களும் எப்படி அசம்பாவிதமோ, அப்படியே பத்துத்தலை இராவணனும், மூன்று தலை தத்தாத்திரியனும், நான்கு தலைப் பிரம்மனும், ஐந்து தலைச் சிவனும், ஆறுதலைக் குமரனும் குதிரைக் கொம்பாம். ஆயினும் பிராம்மண சமயத்தால் போற்றிவரும் தேவர்களுடைய மூலத்தைக் கொஞ்சம் கிளறிப்பார்த்தால் அத்தனையும் ஆபாசமாக விருப்பதுடன் அசுரர்களைப் பார்க்கிலும் எவ்வளவோ கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

இப்போதும் பார்சிக்காரர்கள் தெய்வமாகிய அஹீரா (அசுரா)வை ஆராதிக்கும் போது பின்வருமாறு சொல்லுகிறார்கள்:—

"நான் தேவர்களைத் தொழுவதை ஒழித்து விட்டேன். தேவர்களுக்கு விரோதியான அஹீரா (அசுரா)வின் பக்தனாக இருக்க விரும்புகிறேன். எல்லா நன்மைகளும் அஹீரா (அசுரா) விடமிருந்துதான் வருகின்றன.

நான் தேவர்களை விட்டு விலகிவிட்டேன். அவர்கள் கொடியவர்கள், சண்டாளர்கள், துஷ்டர்கள்; எல்லாக் கொடுமைகளுக்கும், துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும், இழிவுகளுக்கும் காரண பூதர்கள் அவர்கள் தான். அவர்கள் எல்லோரிலும் கடைப்பட்டவர்கள். தேவர்களைப் போன்றவர்களையும் தொலைத்து விட்டேன். அவர்கள் மந்திரக்காரர்கள், மாயக்காரர்கள்; அவர்களை (தேவர்களை) மனமொழி மெய்களாலும் பஹிஷ்காரஞ் செய்கிறேன். அசத்திய மெல்லாம் இதோடு ஒழிந்து போகட்டும்.''

''ஓ தேவர்களே! சோமரசத்தைச் சாப்பிட்ட மயக்கத்தால் உங்களை வசப் படுத்திக் கொண்ட துராத்மாவினின்றும் நீங்கள் பிறந்தவர்கள். மனிதர்களை வஞ்சித்து வதைக்க வல்ல அநேக உபாயங்களை நீங்கள் அந்தத் துஷ்டாத்மாவின் சூழ்ச்சியால், மிகுந்த துஷ்டர்களால் அனுஷ்டிக்கப்பட்டுகிற மந்திரங்களை நீங்கள் உண்டாக்கினீர்கள். இந்த மந்திரங்கள் தேவர்களுக்குப் பிரியமானவையா யிருந்தாலும் சுத்தர்களால் ஒதுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் ஞானமும் சத்தியமும் நிறைந்த அஹுரர் (அசுர்) மஸ்டாவால் துஷ்டர்கள் அறிவடைகிறார்கள்''

பார்சி மதஸ்தர்களுடைய வேத நூல்களில் இவைபோன்றன அநேகம் காணப்படுகின்றன. ''அஹுரர்'' என்னும் பதத்திலுள்ள ''ஹு'' என்னும் சப்தம் அவர்களுடைய வேத பாஷையின் இலக்கணப்படி ''சு'' என்பதன் வேற்றுமை யாகையால் அந்தப்பதம் ''அசுரர்'' என்பதின் திரிபு.

ஆதலால், அவர்கள் தங்கள் மத சித்தாந்தப்படி அசுரர்களைக் கொண்டாடி தேவர்களை இழித்துக் கூறுகிறார்கள்.

''சென்னையில் படித்த ஜனங்களும், என் அரசியல் தலைவர்களும் கூட ஆசார சீர்திருத்தத்தை மதவிரோத மென்றும் அநாவசிய மென்றும் கருதுகிறார்கள்.

(லாலா லஜபதி.)

விடுதலை வேண்டும்.

(தோழர் S. சிவப்பிரகாசம்)

(மாதவனே மதனாகரனே எ—மெட்டு.)

தோழர்களே! தொழிலாளர்களே! (தோ)

சூழும் நம் நாட்டினில் தொல்லையுற்றனம்!—நல்ல
சுதந்தரமான வாழ்வு யாவும் அற்றனம்!—தீமை
வாழ்வு பெற்றனம்!—மிகத்
தாழ்வு பெற்றனம்! (தோ)

சாதிகளால் மனச் சஞ்சலம் கொண்டோம்—பொல்லாச்
சாத்திர மதங்களால் வேதனை கொண்டோம்—கொடும்
பேதங்கள் கொண்டோம்—அப
வாதங்கள் கொண்டோம்! (தோ)

பாழ் முதலாளர்கள் படுத்திடும் தொல்லை—தனைப்
பகர்ந்திடிலோ அதற் கெல்லையே யில்லை!—நிதம்
ஏழைகள் தொல்லை—உண்ணக்
கூழுமே யில்லை! (தோ)

வீண்மத பேதங்கள் வீழ்த்துவீர்களே!—நல்ல
விடுதலை வாழ்வு தம்மை வாழ்த்துவீர்களே!—சமம்
போற்றுவீர்களே!—பர
சாற்றுவீர்களே! (தோ]

வாழ்வினிற் செம்மையுற வகுப்போம் நீதியே!—இந்த
மானிலம் போற்றும் சம தர்மம் ஓதியே!—எங்கும்
இன்பம் ஓங்கியே—மக்கள்
என்றும் வாழியே! (தோ)

புதுமைப் பெண்.

1

(பண்டித எஸ். முத்துசுவாமிப்பிள்ளை.)

பிரபஞ்சமே புத்துருப் பெற்று வருகையில்—உலகத்திலே நவநாகரிகம் தாண்டவமாடுகையில்—பெண்கள் மட்டும் அடுப்பூதும் பிராணிகளாய்—பிள்ளைப் பெறும் யந்திரங்களாய்—ஆடவரின் போகக் கருவியாய இருக்க முடியுமா? முடியாது! முடியாது!! முக்காலும் முடியாது!!!

அந்தக் காலம் மலையேறி விட்டது. பெண்ணுலகம் திரண்டு எழுந்து விட்டது. புதுமைப் பெண் உருப்பெற்று விட்டாள். எல்லாத் துறைகளிலும் புதுமைப் பெண் மணம் வீசத்தொடங்கி விட்டது. உலக வாழ்வுக்கு-நாகரிக வாழ்வுக்கு, அவள் இன்றியமையாதவள் என்பதும் ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டது.

புதுமைப் பெண் யார்? சுயமாகச் சிந்தனை செய்யவும் செயலாற்றவும் துணிச்சலுடையவளே புதுமைப் பெண்.

பொருள் விளங்கவில்லையானால் மேலும் சற்றுத் தெளிவாகக் கூறுகிறேன்.

புதுமைப் பெண், பழைய கர்னாடகப் பிராணியல்ல; அடுப்பூதும் அடிமையல்ல; வீட்டுக்கு நாயகி. அவளது ஸ்தானம் அடுக்களை மட்டுமன்று; அவளுக்கு உலகத்திலே எங்கும் இடமுண்டு. அவளுக்குத் தகுதி யில்லாத துறையே உலகத்தில் இல்லை. மளிகையிலும், மண்டியிலும், ஆலையிலும், ஆவணத்திலும், கல்விச்சாலையிலும், நாடக மேடையிலும், நடனச்சாலையிலும், சங்கீத அரங்கிலும், சர்க்கார் கச்சேரியிலும், நீதி மன்றத்திலும், நாவிகச்சாலையிலும், சினிமா டாக்கிச் சாலைகளிலும், சர்வகலா சங்கத்திலும், சட்டசபையிலும், மந்திரிசபையிலும், மருத்துவச்சாலையிலும், சிற்பத் தொழிற்கூடங்களிலும் அவளுக்கு இடம் உண்டு.

மங்கை, மடந்தைப்பருவ எல்லைகளும் புதுமைப் பெண்களுக்கு இல்லை. அவள் என்றும் குமரியே; உடலும், உள்ளமும் வலி பெற்றிருக்கும் வரை அவள் குமரியே; மடந்தையே.

ஆண்கள் உரிமை பாராட்டி வந்த துறைகளிலே அவள் புகுந்து விட்டாள். முதலில் ஆண்கள் எதிர்த்தனர். சமத்துவம் வழங்க மறுத்தனர். கடைசியில் அவள் வெற்றி பெற்று விட்டாள். அவளது உரிமை ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டது. ஆணும், பெண்ணும் சரி நிகர் சமானம். நீராப்பொறியாக ஆண்களே இதை ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

பிரபஞ்சத்துக்கு இருகண்களாக விளங்கும் ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு உழைத்தால் இம்மண்ணுலகமே பொன்னுலகமாகிவிடும்.

பிரபஞ்சத்துக்கு சர்வாதிகாரியாவது அவளது விருப்பமல்ல. ஜீவிதப் போராட்டத்திலே ஒரு பங்கு பெறுவதே அவளது நோக்கம். உலக முன்னேற்ற வேலையில் தன் கடமையைச் செலுத்துவதே அவளது ஆசை. எனவே எவரும் அஞ்சத் தேவையில்லை. அவள் பேயுமல்ல, பூதமுமல்ல, ஆண்களின் சகாக்களே !

புதுமைப் பெண் புகாத இடமே இல்லை. கிராமங்களிலும் நகரங்களிலும் பட்டினங்களிலும் அவளைக்காணலாம். எல்லா இடத்துக்கும் அவள் இன்றியமையாதவள்.

கிராமங்களிலே சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி புகட்டுவாள். கிராமவாசிகளுக்கு சுகாதார போதனை செய்வாள். பெண்களுக்கு குடித்தன யோசனைகள் கூறுவாள்.

நகரங்களிலே சமூக வாழ்வில் அவளே முன்னணியில் நிற்பாள். கல்விச்சாலைகளும் வைத்தியசாலைகளும் ஏற்படுத்திக்கண்காணிப்பாள். சுகாதார வேலைகளில் ஈடுபடுவாள். பொருட்காட்சி நடத்தி மக்களுக்குப் புத்தறிவூட்டுவாள். கல்வியறிவற்ற பெண்கள் முதலில் அவர்களைப்பார்த்துப் பொறாமைப்படுவார்கள்; வம்பளப்பார்கள். கடைசியில் தம் தவறை உணர்வார்கள். புதுமைப் பெண்ணின் உதவி

யை நாடுவார்கள். நகரவாழ்வுக்கு அவள் தேவையென்பதையும் உணர்வார்கள்.

பட்டினங்களிலே புதுமைப் பெண் தன் பூரண தேஜஸ்ஸுடன் பிரகாசிப்பாள்- பட்டினங்களிலே அவள் பூரணசுதந்தரத்துடன் வாழ்வாள். ஒருவர் உதவியும் அவளுக்கு தேவை இல்லை. அவளே தொழில் செய்வாள்; உத்தியோகம் நடத்துவாள்; பொருள் தேடுவாள். தன அறிவையும் விருத்தி செய்து கொள்வாள்.

அறிவே அவளது வலி பொருந்திய கவசம். தனது மன துக்கிசைந்த ஆண் பெண் தோழர்களும் அவளுக்குப் பட்டிணத்திலே கிடைப்பார்கள்.

புதுமைப்பெண்ணைப் புகழ்வோரும் உண்டு; இகழ்வோரும் உண்டு; ஆனால் இகழ்வோரே அதிகம். தற்கால உலக வாழ்வுக்கு அவள் புதியளாகையால் சில சமயங்களில் அவள் தப்புச் செய்வதுண்டு.

குற்றமில்லா மக்கள் இவ்வுலகத்தில்உண்டா? ஆனாலும், புதுமைப்பெண் குற்றங்களைப் பலர் மிகைப்படுத்திவிடுகிறார்கள்; வசை மொழி கூறுகிறார்கள்.

புதுமைப் பெண் குற்றங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகி விடுகின்றன. எனினும் அவள் அஞ்சுவதில்லை; பழிச் சொற்களை லக்ஷியம் செய்யாது அவள் தன்னைத் தானே திருத்திக்கொள்ள முயல்வாள். சில சந்தர்ப்பங்களில் அவளுக்கு மனச் சோர்வு ஏற்படும். "ஐயோ! ஐயோ! இந்த வீண் தொல்லை எதற்கு?" என அஞ்சுவாள், பழைய அடுக்களை சாம்ராஜ்யமே நலமென எண்ணுவாள். ஆனால் அத்தளர்ச்சி சில நிமிஷங்களுக்குத்தான். அப்பால் புதுமைப் பெண் வீரம் மீண்டும் தலை தூக்கிவிடும். நிமிர்ந்து நிற்பாள். புது வீறுகொண்டு எழுவாள். மீண்டும் புன் முறுவலுடன் தன் கடமையைச் செய்யத் தொடங்குவாள்.

புதுமைப் பெண்களுக்குள்ளே அபிப்பிராய வித்தியாசங்கள் உண்டாகலாம். புதுமைப் பெண்கள் பலவித மனப்போக்குடையவர்களாயிருப்பார்கள். ஆனால் அத்தகைய முரண்பாடுகளினால் அவர்களது வாழ்வு விகாரமடையாது. மாறாக அவர்களது வாழ்வு புதுச்சுவையும் புதுமணமும் புது அழகும் பெறும்.

சுயமரியாதைக்காரரும், மதமும்.

மதம் என்பது கடவுளாலும் கடவுள்களால் அனுப்பப் பட்டவர்களாலும் கடவுளை அடைவதற்கும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்மந்தத்தை விளக்குவதற்கும் ஏற்பட்டவைகள் என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம்.

மனிதன் நடந்து கொள்ள வேண்டியதற்கு ஆக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்—விதிகள்—திட்டங்கள் என்பது தான் மதம் என்பது மற்றொரு சாராரின் அபிப்பிராயம்.

எப்படி இருந்தாலும் சுயமரியாதைக்காரர்கள் மதம் என்பதைப்பற்றி கொண்டுள்ள அதப்பிராயம் பலர் அறிந்ததேயாகும். நிர்ப்பந்தமான அல்லது மூடநம்பிக்கையானதும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் சாத்தியத்துக்கும், மாறானதும் பகுத்தறிவிற்கும் ஆராய்ச்சி அல்லது விஞ்ஞானத்திற்கும் எதிரானதுமான காரியங்களையோ கருத்துக்களையோ ஆகாரங்களையோ ஏற்றுக்கொண்டு இருப்பதேமதம்என்றும், அதுஎதுவானாலும் அப்படிப்பட்ட மதங்களையே சுயமரியாதைக்காரர்கள்மறுக்கிறார்கள் என்பதோடு அம்மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

சாதாரணமாக இன்று இந்தியாவில் பெரும்பான்மையான அதாவது 100-க்கு 95.பேர்களுக்கு மேலாகவே உள்ள மக்களை ஆவாகனம் செய்து கொண்டிருக்கும் மதங்களாகிய இந்து மதமும் மற்றும் சீர்திருத்த மதங்கள் என்பவையாகிய இஸ்லாம், கிறிஸ்து, ஆரிய சமாஜம், பிர்மசமாஜம், முதலிய பல மதங்களும் நிர்பந்தமான நம்பிக்கை (அதாவது நம்பித்தான் தீரவேண்டும் என்பது) அல்லது மூடநம்பிக்கை அல்லது கொள்ள முடியாததும் ஆதாரமில்லாததுமான விஷயங்களில் நம்பிக்கை வைத்தல் ஆகியவைகளையோஅல்லது இவற்றில் சிலவற்றையோ கொண்டதாகத் தான் காணப்படுகின்றன.

சரீரம் வேறு, ஆத்மா வேறு என்றும், கடவுள் வேறு ஆத்மாவேறுஎன்றும், அதுமனிதனுக்கும்கடவுளுக்கும் தொடர்புடையது என்றும் மனிதனையும் கடவுளையும்ஒன்று சேர்

பது என்றும், சரீரத்தின் கூட்டுறவால், அதன் தூண்டுதலால் ஆத்மா செய்த குற்றத்துக்கு கடவுளுடைய தண்டனைகள் ஆத்மாவுக்கு மாத்திரம் தான் கிடைக்கும் என்றும, இறந்த பிறகு அதாவது சரீரத்தை விட்டு ஆத்மா பிரிந்த பிறகு தீர்ப்பு காளில் மறுபடியும் ஒரு சரீரத்தைப் பெற்று சித்திர புத்திரன் கணக்குப்படி தண்டனைகள் கண்டனைகள் அடையும் என்றும், செத்தவர்கள் மறுபடியும் பிறப்பார்கள் என்றும், ஒரு ஆத்மாவுக்கு பல ஜன்மங்கள் உண்டு என்றும், அந்த ஜன்மங்கள் எல்லாம் ஆத்மாவும், சரீரமும் கலந்து இருந்த காலத்தில் செய்த காரியத்துக்கு ஏற்ற விதமாகக் கிடைக்கும் என்றும், இப்படி இன்னும் எவ்வளவோ விஷயங்களைக் கொண்டவைகளே இன்று செல்வாக்குள்ளதும் இந்நாட்டில் 100க்கு 95 பேர்களுடையதுமான மதங்களாய் இருக்கின்றன.

இப்படிப்பட்ட மதங்களைத் தான் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக் கொள்வதில்லை. ஒப்புக் கொள்ளவும் முடியாது. என்பதோடு இந்த மதங்களிலிருந்து மக்கள் விடுபட்டு அறிவுச் சுதந்திரவாதிகளாக-பகுத்தறிவுவாதிகளாக ஆகவேண்டும் என்பது சுயமரியாதைக்காரர்களின் முக்கிய லக்ஷியமுமாகும்.

அது போலவே உலக நடப்புக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கும், இன்பதுன்பங்களுக்கும் காரணகர்த்தாவாக கடவுள் என்கின்ற ஒரு வஸ்து இருக்கிறது என்பதையும், அது மக்கள் தீண்டப்படாதவர்கள் ஆவதற்கும், மக்களை மேல் ஜாதிக்காரர்கள், முதலாளிகள், அரசர்கள் என்பவர்கள் கொடுமைப் படுத்துவதற்கும் காரணமாயும் மனிதனுக்கு ஆக உலகில் உள்ள ஜீவராசிகள் ஆடு, மாடு, பன்றி, கோழி, பக்ஷிகள், மச்சங்கள் முதலாகியவைகள் சிருஷ்டிக்கப்பட்டது என்பதற்கும் காரண கர்த்தாவாயும் இருக்கிறது என்பதையும் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியை ஒழிக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

மற்றும், அக்கடவுளே எரிமலை, பூகம்பம், புயல்காற்று, வெள்ளக்கொடுமை ஆகியவைகளுக்கு கர்த்தவாகவும் விஷஜுரம், தொத்து நோய், கொள்ளை நோய், குறை நோய், உளை மாந்தை ஆகிய வியாதிகளுக்கும், தேள், பாம்பு முதலிய விஷக்கிருமிகளுக்கும் புலி, சிங்கம், ஓநாய், கரி

முதலிய துஷ்ட ஜெந்துக்களுக்கும், சிருஷ்டி கர்த்தாவாகவும் எலியைப் பூனை தின்பதற்கும், ஆட்டைப் புலி தின்பதற்கும், புழுப்பூச்சிகளை பட்சிகள் தின்பதற்கும், பட்சிகளை வேடர்கள் வேட்டையாடுவதற்கும் காரணகர்த்தாவாயும் இருக்கிற கடவுளையும்சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அப்படிப்பட்ட கர்த்தாவையும் ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

மேலும் வேறு எப்படிப்பட்ட கடவுளானாலும் அதை வணங்கினால், அதற்கு ஆகாரம், நகை, துணி பெண்ஜாதியைப் பாட்டி முதலியவை வைத்து பூஜைசெய்தால், உயிர்பலிகொடுத்தால், இன்ன இன்ன மாதிரி தொழுதால், ஸ்தோத்திரித்தால் ஜபித்தால் மனிதன் செய்த எல்லா கெட்ட காரியங்களின் பாபங்களையும் மன்னித்துவிடுவார் என்கின்ற கடவுளையும் ஒப்புக் கொள்ளாததோடு அப்படிப்பட்ட கடவுளுணர்ச்சியையும் ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள்.

கடவுளைப்பற்றிய மற்ற விஷயத்தை மற்றொரு சமயம் விவரிப்போம்.

மதம் என்னும் விஷயத்தில் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்ட மதங்கள் இருக்கக்கூடாது என்பது தான் சுயமரியாதைக்காரர்களின் மத சம்பந்தமான அபிப்பிராயமாகும்.

ஏன் இதை முதலில் குறிப்பிடுகிறோம் என்றால் விவகாரங்களுக்கு வரும்போதுஒவ்வொருமதக்காரரும் தங்கள் தங்கள் மதங்களுக்கு வெவ்வேறு தத்துவம் இருப்பதாகவும்,சகலவிதமானபகுத்தறிவுபரீக்ஷைகளுக்கும் தங்கள் மதம் நிற்கும் என்றும் சொல்லி வாதாடும்போது சமயத்துக்குத்தகுந்தபடி பேசுவதால் நிலைமை கஷ்டத்திற்கு உள்ளாகிறது. ஆகையால் மதங்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் பல மதங்களுக்கும் உள்ளபொதுக் கொள்கைகளையே குறிப்பிட்டோம்.

மற்றும் மதம் என்னும் வார்த்தைக்கு பலவித அருத்தங்களும், கருத்துக்களும் சொல்லப்படுகின்றன.

உதாரணமாக ஒருவர் "என்னுடைய மதம் யார் மனதையும் புண்படுத்தாமலும் யாருக்கும் என்னால் கூடிய நன்மை செய்வது தான்" என்று சொல்லுகிறார்.

மற்றொருவர் "என்னுடைய மதம் கடவுளைப்பற்றி கவலைப்படாத நாஸ்திக மதம் தான்" என்கின்றார்.

மற்றொருவர் "என்னுடைய மதம் கடவுள் இல்லை; ஆத்மா இல்லை. ஆனால் கர்மத்துக்குத் தகுந்த பலன் உண்டு" என்பது தான் என்கிறார்.

மற்றொருவர் "நான் கருதியிருக்கும் மதம் திமிர் அல்லது கொழுப்பு" என்கிறார்.

மற்றொருவர் "மதம் என்னும் வார்த்தைக்கு கொள்கை அல்லது கடமை" என்பது தான் அர்த்தம் என்கிறார்.

மற்றொருவர் "என்னுடைய மதம் விஞ்ஞானம்" என்கிறார்

மற்றொருவர் "என்னுடைய மதம் மனித ஜீவ அபிமானம் தான்" என்கிறார். மற்றொருவர் "என்னுடைய மதம்பொதுவுடமை கொள்கை" என்கிறார். இப்படியே இன்னும் பல விதமாய் மதம் என்னும் வார்த்தைக்கு தனித்தனி கருத்துக்கள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அவைகளைப்பற்றியெல்லாம் விவரிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

ஆனால் முகப்பில் கூறிய இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், முதலிய மதங்களின் அஸ்திவாரம் ஒன்றுபோலவே இருந்தாலும் அதன் மேல் கட்டப்பட்ட கட்டடங்களில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஒருவன் உண்மையாகவே மதம் இல்லாமல் இருப்பது நாஸ்திகம் என்று கருதிக்கொண்டு ஏதாவது ஒரு மதத்தின் பேரால் உயிர் வாழ வேண்டியவனாய் இருக்கிறான்; ஆதலால் எப்படியாவது தான் நாஸ்திகன் என்று சொல்லப்படாமல் இருக்கவேண்டும். மற்றப்படி மதக்கொள்கைகள் எது எப்படி இருந்தாலும் தான் லக்ஷியம் செய்வதில்லை என்கின்ற கருத்தின் மீதே தனக்குள் எவ்விதக் கொள்கையும் இல்லாமல் ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஏதோ ஒரு மத வேஷத்தைப்போட்டுக்கொண்டு இருக்க வேண்டியவனாக இருக்கிறான்.

மற்றும் பலரும் அதுபோலவே மதங்களுக்கு உள்ள செல்வாக்குக்குபயந்து கொண்டுமதவேஷக்காரர்களாய் இருக்கிறார்கள். பரத்தில்மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருப்பது போலவே இகத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருக்கிறார்கள்.

விளக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால் பணத்துக்கு ஆகவும், பெண்ணுக்கு ஆகவும், வயிற்றுப் பிழைப்புக்கு ஆகவும், உத்தியோகத்துக்காகவும் எத்தனையோ பேர் மதவாதிகளாகவும், மதமாற்றக்காரர்களாகவும் இருக்கிறார்கள்.

பொதுவாக பார்க்கப்போனால் கடவுள் ஏற்பட்ட வெகு காலத்துக்கு பிறகுதான் மதம் ஏற்பட்டு இருக்க வேண்டுமே ஒழிய கடவுளும் மதமும்இரட்டைப்பிள்ளைகள் போல் பிறந்தவைகள் அல்ல.

எப்படி இருந்தாலும் மதங்களானவைஇன்றுசடங்காகவும் வேஷமாகவும் இருக்கின்றனவே ஒழிய கொள்கையாகக் கூட எந்த மதமும் அனுபவத்தில் இருக்கவில்லை. புஸ்தகங்களில் பல கொள்கைள் இருந்திருக்கலாம்; இன்னும் இருந்துகொண்டிருக்கலாம். காரியத்தில் அக் கொள்கைகள் பெரிதும் அமுலில் இல்லை.

ஆகவே அமுலில் இல்லாத கொள்கைகளைக் கொண்ட மதங்களில் எந்தமதம் மேலானது என்றோ, எந்தமதக்கொள்கை மேலானது என்றோ வாதிப்பதானது ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் கோட்டைகளில் எது பலமான கட்டடம் என்றும், எது வசிப்பதற்கு சவுகரியமானது என்றும் கேட்பதுபோல் தான் ஆகும்.

முதலாவதாக ஒருமதத்துக்கு கொள்கைகள் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒரு கொள்கை நல்ல கொள்கை என்றால் அதற்கு இரண்டு சக்தி இருக்க வேண்டும்.

அது எல்லா மக்களுக்கும் ஒன்று போல் அனுபோகத்தில் சமமாக நடத்தக்கூடியதாக இருக்கவேண்டும். அதோடு

கூடவே அக்கொள்கைகள் எல்லா மக்களாலும் எவ்வித நிர்ப் பந்தமும் இல்லாமல் தானாகவே பின்பற்றித் தீரவேண்டியதா கவும் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட தத்துவங்களைக் கொண்ட கொள்கையை இதுவரை எந்த பெரியவரும் கண்டுபிடிக்கவுமில்லை. எந்த மதமும் கொண்டிருக்கவும் இல்லை.

அது செய்தால் பாவம், இது செய்தால் மோக்ஷம், என் றும் அது செய்தால் லாபம் இது செய்தால் கஷ்டம் என்றும், அது செய்தால் தண்டனை இது செய்தால் தூக்கு என்றும், இப்படியாக பல நிர்ப்பந்தங்கள், பயம், தண்டனை கண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பால் ஏற்படுத்தப்பட்ட கொள்கை களாகவும் அமுலில் கொண்டுவர எப்போதுமே முடியாததாக வும் அமுலில் கொண்டுவர மிகவும் கஷ்டப்பட வேண்டியதாக வும் மனிதனால் சாதாரணமாக செய்யக்கூடியதும் செய்வ தற்கு ஆசையுண்டாக்கக் கூடியதும் அல்லாததாகவும் இருக் கக்கூடிய கொள்கைகளையேதான் எந்த மதமும் கொண்டி ருக்கிறது.

எந்தக் கொள்கையாவது கடவுளால் உண்டாக்கப்பட்ட தாகவோ அல்லது கடவுளுக்கு இஷ்டமானதாகவோ இருந்தி ருக்குமானால் அது மக்களுக்கு மிகவும் இஷ்டமானதாகவும், செய்வதற்கு மிகவும் ஆசையுடையதாகவும், சுலபத்தில் செய்து முடிக்கக்கூடியதாகவும் இருந்திருக்க வேண்டாமா? கடவுளுக்கு இஷ்டமான கொள்கை மனிதனுக்கு கசப்பானதா கவும், பெரும்பான்மையோருக்கு செய்வதற்கு முடியாததாக வும் இருப்பதற்குக் காரணம் என்ன ?

ஆகவே கடவுளின் பேரால் மதத்தின் மூலம் மத கர்த் தாக்களால் சொல்லப்பட்ட கொள்கைகள் என்பவை சொன்ன வர்களுக்கு அவர்களது புத்தித்திறமையும், அக்காலத்துக்கு சரி என்று பட்ட கருத்துக்களையும் கொண்டவைகளே தவிர எந்தக் கொள்கையும் எந்தக் கடவுளாலும் சிருஷ்டிக்கப்பட்ட தல்லவென்றே சுயமரியாதைக்காரர்கள் கருதுகிறார்கள்.

இன்றும் மதமானது மக்களின் கூட்டு வாழ்க்கையின் அவசியத்துக்கு ஏற்ற கொள்கைகளைக் கொண்டது என்பது டன் அவை பகுத்தறிவுக்கு ஒத்ததாகவும், கால தேச வர்த்த மானத்துக்கு ஏற்ப திருத்திக்கொள்ளக்கூடியதாகவும், சகல மக்களுக்கும் பலன் ஒன்றுபோல் உண்டாகக்கூடியதாகவும் இருக்கத்தக்க கொள்கைகள் கொண்டது என்றால் அதை சுய மரியாதைக்காரர்கள் மறுப்பதற்கு முன்வரமாட்டார்கள்

மதக் கல்வியும், மாணாக்கர்களும்.

(டாக்டர் பராஞ்சிபே.)

மதத்தைக்குறித்த விஷயங்களில், அவைகளைத் தெரிந்து கொள்ள ஆசைப்படும் குழந்தைகளின் இச்சையானது அடக்கப்பட்டும், தடுக்கப்பட்டும், அடியோடு ஒழிக்கப் பட்டும் வந்திருக்கின்றது. குழந்தைகள் யாவருமே அநேகமாக கண்மூடித்தனமாகவும்; முன்பின் யோசனையில்லாமலும் அநேக காரியங்களைச் செய்வதற்கு பழக்கப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய செய்கைகளின் உண்மையான கருத்துக்களை அக்குழந்தைகளுக்கு விளங்கவைப்பதே கிடையாது. அநேகமாய் பயிற்றுவிப்பவர்களுக்கும் தெரியாது. உதாரணமாக பிரார்த்தனைகளென்பவைகளை எடுத்துக்கொள்ளுவோமானால், இந்தப் பிரார்த்தனைகளும், ஜபங்களும் தங்களுடைய தாய்ப்பாஷைகளிலிருந்த போதிலுங்கூட இந்தியாவிலும் சரியே, அல்லது உலகிலுள்ள ஏனைய பாகங்களிலும் சரியே (இவைகள் பெரும்பாலும் தாய் பாஷைகளில்லை.) அவைகளின் வாசகப்போக்கு—அதாவது நடைகள், சுலபத்தில் அறிந்துகொள்ள முடியாத விதத்தில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை மனப்பாடம் செய்து சொல்லும்படியாக நாம் குழந்தைகளுக்குக் கட்டளையிட்டால் அவ்விபரீத வார்த்தைகளின் அர்த்தத்தை அறிந்து கொள்ள முடியாத குழந்தைகள் யாவரும் தங்கள் மனப்போக்கின்படி, தங்களுக்குத் தோன்றிய ஏதாவதொரு அர்த்தத்தை அவைகளுக்கு ஏற்படுத்தி வைத்துக்கொண்டோ, அல்லது அர்த்தத்தில் கவலை இல்லாமலோ தான் அவைகளை மனப்பாடம் செய்தபடியே ஒப்பிக்கிறார்கள். உதாரணமாக நமது சொந்த அனுபோகங்களிலிருந்தே பரிகாசத்தை விளைவிக்கத் தக்கதான இத்தகைய எண்ணிறந்த ஆபாசங்களை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்காட்டலாம். மேலும் இறந்து போன—அதாவது பழக்கத்திலில்லாத, மாஜி பாஷையிலிருக்கக்கூடிய பிரார்த்தனைகளைக் குழந்தைகளும் அறிந்து கொள்ளாமல், நாமும் அறிந்துகொள்ளாமல் நமது குருவும் சரியானபடி அறிந்துகொள்ளாமல் உரைக்கும்படியான ஓர் சந்தர்ப்பம் நேரும்போது இதை நினைத்துப் பார்த்தால் இத்

தகைய குற்றங்கள் ஒவ்வொருவருக்கும் தானாகவே விளங்கும்.

வார்த்தைகளை உச்சரிப்பதனாலேயே ஏற்படக் கூடியசப்தமானது அவ்வார்த்தைகளுக்குச் சுத்தஆபாசமான கருத்தை விளைவிக்கின்றது. மேலும் புரோகிதத் தொழிலினால் தங்களுடைய ஜீவியத்தை நடாத்தும் புரோகிதர்களும், குருமார்களும் கூட, குறித்த ஓர் சந்தர்ப்பத்திற்கு உபயோகிக்கத் தகாத சமஸ்கிருத சுலோகங்களைச் சில சமயங்களில் உபயோகித்துக் கொண்டு வருவதையும், அவைகளைப் பாடிக்கொண்டு வருவதையும் நாம் இன்னும் காணலாம். சில சந்தர்ப்பங்களில் அருவருப்பானதும், வெட்கங் கெட்டதுமான மொழிகளை உச்சரிப்பதாலுண்டாகக் கூடிய தொனியைப் போலவே அப்பழைய மொழிகளை உச்சரிப்பதாலேற்படக்கூடிய சம்பவமானது குழந்தைகளின் மனத்தில் நாம் எதிர்பார்த்திருந்ததற்கு நேர் விரோதமான மனப்பான்மையை உண்டாக்குவதையும் நாம் காணலாம்.

மதத்தினால் தான் மக்களின் மனமானது பரிசுத்தமடையும் என்பதாக எவ்வளவு தான் வர்ணித்து வர்ணித்து, வெகு அலங்காரமாகச் சொல்லப்பட்ட போதினுங்கூட, மதமானது பொதுவாகவே போதுமான அறிவும், ஞானமும் இல்லாமல் ஆண்களையும், பெண்களையும் கண்மூடித்தனமாக ஆவரவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்களுக்கும், ஆச்சாரங்களுக்கும் அடிமையாகி நடந்து தீரவேண்டிய தான ஓர் நிர்ப்பந்தத்தை உண்டாக்கியே தான் தீருகின்றது. ஆகையினால் மதக்கட்டளைப்படி ஒரு குழந்தை நடக்கவேண்டுமென்று கருதி அதற்கு மதக்கற்பனைகளைக் கற்பித்தோமேயானால் அது இம்மாதிரியான குருட்டுப் பழக்க வழக்கங்களுக்கும், மூட நம்பிக்கையான ஆசாரங்களுக்கும் கட்டுப்பட்டுத்தான் தீரும். இதன் பயனாக அக்குழந்தை தனது பிற்காலவாழ்வில் எதுமுக்கியம்? எது பிரதானம்? அல்லது எத்தருணங்களில் எதுகூடாது? என்பதைக்கூட அறிய முடியாமல் போய் விடுகின்றது. மேலும், மற்றுஞ் சில சமயங்களில் தங்களுடைய மதக்கட்டுப்பாட்டின்படி அவர்கள் நடந்து கொள்ள ஆரம்பிக்கும்போது அச்செய்கையானது மற்றவர்களுக்கு எவ்விதமான கெடுதியை விளைவித்த போதிலும் கூட அது இவர்கள் மனதுக்கு நன்மையாகவே காணப்படுகின்றது.

உதாரணமாக இங்கிலாந்து தேசத்தில் மாலை நேரங்களில் நடைபெறக்கூடிய ஒரு சாப்பாட்டு விருந்துக்கோ, அல்லது சிற்றுண்டிக்கோ ஒருவன் குடித்து விட்டு வந்து அக்கூட்டத்தில் கலந்து கொள்ள வெட்கப்படாவிட்டாலும் கூட வெள்ளைச் சட்டை தரித்துக் கொண்டு கருப்பு டை (கழுத்துத் துணி) அணிந்து கொண்டு அக்கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்ள வெட்கப்படுவான்.

அது போலவே சமீப காலம் வரையிலும் இந்தியாவில் கிராமங்களில் வாசம் செய்யும் ஓர் இந்துவானவன் தன்னுடைய தகப்பனார் மரணமடைந்து விட்டால் அவனுடைய மீசையை உடனே சிரைத்து விட வேண்டுமென்றும், அப்படி சிரைக்காவிட்டால் அது ஒரு பெரிய பாவமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால் ஒரு மகன் தன்னுடைய தந்தையுடன் தினந்தோறும் சண்டைகளும், சச்சரவுகளும் செய்து கொண்டும், அவருக்கு வேண்டிய வசதி செய்யாமலும், தகப்பனாருடைய வாழ்நாள் முழுதும், அவர் சதா துக்கத்திலேயே ஆழ்ந்திருக்கும் படியாகச்செய்து வந்தவனாகவும் இருந்தபோதிலும் கூட, அக்கொடுமைகள் எல்லாம் அவ்வளவாகப் பொருட்படுத்தப் படுவதில்லை; ஆனால் தகப்பன் இறந்த உடன் மகன் தன் மீசையைச் சிரைக்காதிருந்ததே பெரிய தப்பிதமாகவும், பாவமாகவும் பொதுஜனங்களால் கருதப்பட்டு வந்தன. இத்தகைய சம்பவங்களால் சூழப்பட்டு இவைகளுக்கு மத்தியில் பிறந்து வளரும்படியான ஒரு குழந்தையானது இம்மாதிரியான கொள்கைகளையும், எண்ணங்களையும் தான் இயல்பாகவே கிரகித்துக் கொள்ளுமே தவிர, அறிவு பெறுவது என்பது கஷ்டமாகிவிடும். ஆகையினால் குழந்தைகளின் அறிவு விசாலப்படுவதற்கான துறைகளில், அவைகளைப் பயிற்றுவிப்பதற்கான வழிகளில் நடத்திக்கொண்டு செல்லத் தூண்டுகோலாயிருக்கும்படியான முறைகளிலேயே அவர்கள் பழக்கப்பட வேண்டும். ஆனால் மதத்தைப் பற்றிய கல்வியும் அறிவும் மக்களுக்கு அவசியம் போதிக்கப் பட்டுத் தான் தீரவேண்டுமெனப் பிடிவாதம் செய்யும் மதப்பிரசாரகர்கள் மத பக்திக்காரர்களெல்லாம் ஒரு சமயம் தங்கள் பிடிவாதங்களில் வெற்றி பெற்று விடுவார்களேயானால், அவர்கள் அநாகரீகமானதும், மூடநம்பிக்கையுள்ளதுமான கொள்கைகளிலிருந்து மக்கள் விடுதலையடைந்து சுதந்திரம் பெற வேண்டும் என நினைத்துப் போராடிக் கொண்டு வரும் இந்திய சீர்திருத்தக்காரர்களின் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போட்

டதில் வெற்றி பெற்றவர்களாவார்களே யொழிய, மற்றபடி அவர்களால் மனித சமூகத்திற்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பது திண்ணம்.

எல்லா மதங்களிலும் கூறப்படும் மூதன்மையான தத்துவமென்ன வென்றால், அவைகள் ஒவ்வொன்றும் எல்லா விஷயங்களைப் பற்றியும் ஆராய்ந்தெடுத்த பரிசுத்தமான உண்மைகளையே தாம் கூறுவதாகவும், அவ்வுண்மைகள் தங்களுக்கு மாத்திரமே சொந்த மென்பதாவும் வாதமிடுவதே யாகும்.

இவ்வாறு சில விஷயங்களைத் தங்களுடைய மதத்துக்குத் தான் சொந்தமெனப் போராடும் தன்மையானது, அன்னிய மதங்களின் மீது துவேஷத்தை வளர்ப்பதற்கு ஓர் அறிகுறியாகவும், தூண்டு கோலாகவும்மிருந்து கொண்டு வருகின்றது. ஆனால் இப்பொழுதுதான், அதாவது தற்கால உலகில் தான் ஏதோ சில அறிவாளிகள் மதத்துவேஷமின்றி யிருக்க வேண்டுமென்றும், மதங்களில் சகிப்புத்தன்மை யிருக்க வேண்டுமென்றும் ஆசைப்படுகின்றார்கள். என்றாலும் மற்றொரு பக்கத்தில் ''மதம் மக்களுக்குக் கண்டிப்பாய் இன்றியமையாதது'' எனவும், ''ஒவ்வொருவரும் அதை அறிந்தே இருக்க வேண்டும்'' எனவும் சொல்லிக் கொண்டும், எல்லோருக்குமே குழந்தைகளாயிருக்கும் பொழுதே அன்னிய மதங்களின் மீது துவேஷம் உண்டாகி வளர்ந்து வருமாறு சிறு பருவத்திலேயே அவர்களுக்குப் போதிக்கப் பட வேண்டியதே சரியான மதக்கல்வியாகும் என்று கருதப்பட்டு, பலவந்தமாகவே போதிக்கப்படுமே யானால், மதத்தில் சகிப்புத் தன்மையும், மத துவேஷமற்ற தன்மையும் எப்படி ஏற்படும்? ஆனால் இதற்குமாறாக, நாளாக நாளாகக் குழந்தைகள் தங்களுடைய சமூக சம்பந்தமான கட்டுதிட்டங்களுக்குட்படாத ஏனைய மதஸ்தர்களைக் கேவலமாகவும், இழிவாகவும் நினைக்கும்படியாகத்தான் செய்ய முடியும்.

இத்தகைய சம்பவங்களால், அதாவது குழந்தைகளுக்கு மதத்தைப் போதிப்பதால் உண்டாகக்கூடிய நிலைமையானது முக்கியமாய் இந்தியாவுக்கு ஓர் பெருந்த இடையூறாகவே யிருந்துகொண்டு, அபாயத்தையே விளைவித்துக்கொண்டிருக்கும்; ஏனெனில் இந்தியர்களின் குழந்தைகள் பெரும்பாலும் தங்களுடைய சொந்த ஜாதி மக்களுடன் மாத்திரம்

நேக சம்பந்தம் வைத்துக்கொள்ளுவதால், ஏனைய மற்ற ஜாதியினரின் மக்களின் மீது தப்பெண்ணங்கள் கொண்டு அவர்களை துவேஷிப்பதற்குரிய சாதனங்களேற்படுவதற்கு மிக்க அனுகூலமாயிருக்கின்றன. இம்மாதிரியான தப்பெண்ணங்களாலேற்படக்கூடிய துவேஷத்தையும், வெறுப்பையும் நாம் மதத்திற்குட்பட்ட ஒழுக்க முறைகளெனக் கூறி, அக்குழந்தைகளின் மனதில் பதியும்படி செய்வோமேயானால் அப்பொழுது இத்தப்பெண்ணங்களும், துவேஷ புத்தியும் அவர்களுடைய மனத்தில் இன்னும் பதின்மடங்கு அழுத்தந் திருத்தமாகப் பதிக்கப்பட்டு நிலைபெறுகின்றன.

மதத்தின் பேரால் மக்களுக்குச் சாதாரணமாகப் போதிக்கப்பட்டு வரும் விஷயங்களால், அவர்கள் பொது வாழ்க்கையில் யாதொரு பிரயோஜனத்தையும் அடையமுடியவில்லையெனக்கூறப்படுவது முற்றும் உண்மையேயாகும். ஏனெனில் இம்மாதிரி வளர்க்கப்பட்ட குழந்தைகள், வளர்ந்து பெரியவர்களாகி, பொதுஜன வாழ்க்கையிலீடுபடும் பொழுது, தங்களுடைய மத சம்பந்தமான உண்மைகளைத் தங்களைப்போல் மற்றவர்களும் நம்பி, அவைகளைப் பின்பற்றாத போதிலும்கூட, மரியாதையும், யோக்கியதையும், ஒழுக்கமுமுள்ள ஆடவர்களும் பெண்களும் உலகத்திலிருப்பதை அவர்கள் கண்டு அறிந்து கொள்ளுகின்றார்கள். என்றாலும் அறியாமையின் பயனாக, அவர்களையறியாமல் அவர்களுடைய மனதில் பதியவைக்கப்பட்டிருந்த கருத்துக்களின் பலாபலன்கள் அவர்களுடைய மனத்தை விட்டகலாமல் அங்கேயேதான் இருந்து வருகின்றன. ஆகையால் இவ்வளவு வரையிலாயினும், மக்களைப் பரந்த நோக்கத்துடனும், அன்புடனும், இரக்கத்துடனும் சமமாகப் பாவிப்பதற்கு மத சம்பந்தமான கல்வியானது இவர்களுக்கு ஓர் பெரிய முட்டுக்கட்டையாயிருந்து வருகிறது என்றேற்படுகின்றது.

மதக் கோட்பாட்டின்படி ஒரு சக்கிலியைத் (ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் ஒருபிரிவு) தீண்டினால், அதனால் தான் தீட்டுப்பட்டு விடுவதாகவும், அத்தீட்டை நீக்கவேண்டுமானால் கண்டிப்பாய் ஸ்நானம் செய்துதான் தீரவேண்டுமெனவும் நாம் உயர்ந்த ஜாதிக் குழந்தைக்கு இளமையிலேயே கற்றுக்கொடுத்து விட்டோமேயானால், அக்குழந்தையானது தன்னுடைய பிற்கால வாழ்க்கையில் ஒரு சக்கிலியும் தன்னைப்போலுள்ள மனித ஜன்மந்தானெனக்கருதுவதற்கு; அதற்கு அளவற்ற

மனோதிடமும், மனோவலிமையும் இல்லாமலே போய்விடுகின்றது. அக்குழந்தையானது ஒரு சமயம் தன்னுடைய பேரறிவினுதவியினால் திண்டாதாரும் தன்னைப்போலவே மனித ஜன்மங்கள் தானெனக்கருதி, அவர்களையும் மக்களென நினைக்கக்கூடிய நிலைமையேற்பட்ட போதிலுங்கூட அக்குழந்தையானது இளமையாயிருக்கும்பொழுது அதனுடைய மனத்தில் ஆழமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் பதிய வைக்கப்பட்டிருந்த போதனைகளால் ஒருசமயம் அது தன்னையுமறியாமல் பாதிக்கப்படக்கூடும். ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை நடத்தும் முறைதான் ஹிந்துமதத்தால் மக்களுக்கேற்பட்ட துன்பங்களிலெல்லாம் ஒருசமயம் தலைசிறந்து முதன்மையாய் விளங்கக்கூடியதாயிருக்கலாம். ஆகையினால் மத சம்பந்தமான போதனா முறையானது கல்வித்துறையில் புகுத்தப்படுமேயானால் அப்பொழுது திண்டாமையொழிப்பதென்னும் விஷயமானது இன்னும் அளவுக்கு மீறிப் பதின்மடங்கு கஷ்டமாகி விடக்கூடும்.

ஹிந்து மதமானது இஸ்லாம் மதத்தைப்போலவாவது அல்லது கிறிஸ்து மதத்தைப்போலவாவது ஏனைய மதங்களை வரிசையாகத் தன்புறுத்திக்கொண்டே வந்திருப்பதாக உரைத்துவிட முடியாதென்பது உண்மையாகவே இருக்கலாம். ஒருவன் தன்னுடைய சொந்த மதத்திலேயே இருந்து மரணமடைவதை விரும்ப வேண்டுமென நமக்கு பகவத்கீதை போதிக்கின்றது. ஆனால் ஏனைய மதங்களிலோ அம்மரணத்திற்காகப் பயந்துகொண்டிருக்க வேண்டுமெனவே போதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினாலேயே, ஹிந்து மதமானது அன்னிய மதஸ்தர்களைத் தன்னுடன் நாளது வரையிலும் சேர்த்துக்கொள்ளவில்லை. மேலும் இந்து மதமானது ஒருவித சகிப்புத்தன்மைக்குப் பெயர் பெற்றதாகவும் விளங்குகின்றது. ஆனால், இத்தகைய சகிப்புத்தன்மையால் மக்கள் யாதொருவித நன்மையுமடைவதற்கில்லை; ஏனெனில் அச்சகிப்புத்தன்மையானது அன்னிய மதஸ்தர்களிடம் சிநேகபான்மையுடனிருக்க வேண்டுமென்கிற எண்ணத்துடனிருப்பதாகக் காணப்படவில்லை. ஆனால் அதுஒரு மாதிரியான செயலற்ற—அல்லது—எதிர்ப்புத் தன்மையற்ற சகிப்புத்தன்மையேயாகும். இவ்வித சகிப்புத்தன்மையினால், அவர்கள் மற்றவர்களுடன் சேராமல், அவர்களிடமிருந்து பிரிந்து, தூரமாகவும், தனியாகவும் வாழ்ந்துகொண்டு வருவதுமல்லாமல், அத்தகைய நிலைமையிலேயே அவர்கள் திருப்தியடைந்து

ஜீவியத்தை நடாத்திக்கொண்டு வருவதுடன், பிறரையும் அவ்வாறே ஜீவித்துக்கொண்டு வரவும் அனுமதிக்கிறார்கள். பொதுவாகவே, இவ்விதமான சகிப்புத்தன்மையானது, அவர்களுடைய மனதில் தாங்கள் முன் ஜன்மத்தில் ஏதோ புண்ணியம் செய்து இந்த ஜன்மத்தில் ஹிந்துவாக ஜனித்திருப்பதாகவும், ஆகையால் இதர மக்களைவிடத் தாங்களே உயர்ந்தவர்களென நினைக்கும்படியான எண்ணங்களுடன் கலந்தேயிருக்கின்றது. ஆகையால், இவர்கள் அன்னியர்களைக் கண்டால் அவர்களைக் கேவலமாகவே நினைப்பதற்கு இடமேற்படுகின்றது. மக்கள் யாவரும் தங்களைப்போல் மனிதர்கள்தானெனவும், தங்களுடைய சகோதரர்கள்தானெனவும், தங்களுக்கிருப்பது போன்ற சுக துக்கங்கள் அவர்களுக்கும் உண்டு எனவும் பரந்த நோக்கத்துடன் எண்ணக்கூடிய மனிதர்கள்தான் இக்காலத்தில் இன்றியமையாதவர்களாக வேண்டப்படுகிறார்கள். இத்தகைய பரோபகார எண்ணம் அவர்களுக்கிடையே வளர்ந்துகொண்டு வருமானால் அப்பொழுது மக்கள் ஜாதி, மதமானவைகளின் எல்லைகளைக் கடந்து தற்செயலாகப் பிறவியின் காரணமாகத் தோன்றிய வித்தியாசங்களை யறவே யொழித்து, அவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்களையும் மறந்து, உண்மையாகவும், சுயமாகவுமிருக்கக்கூடிய எல்லா மக்களையும் நேசிப்பார்கள். கல்வித்துறையில் மதசம்பந்தமான கல்வியை நாம் புகுத்தி விட்டோமேயானால் மக்களுக்கு இம்மாதிரியான பரந்த நோக்கமும், விரிந்த அறிவும், பரோபகார எண்ணமும் தோன்றுவதற்கு இடமேற்படாதென்று கருதியே கல்வித்துறையில் இந்த மதசம்பந்தமான கல்வியைப் புகுத்தப்படக்கூடாதென அறிஞர்கள் பலர் உறுதியாக எதிர்த்துப் போராடிக் கொண்டு வருகின்றார்கள்.

சென்ற முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குள்ளாக இந்தியாவின் பல்வேறு பாகங்களில் பலர் அவரவர்களுடைய மதத்திற்குரித்தான அறிவை வளர்ப்பதற்காக மதபேத சம்பந்தமான பல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்ட தென்பதைக் குறித்து நாம் மேலே எடுத்துரைத்திருக்கின்றோம். அப்படியிருந்த போதிலும் கூட இத்தகைய கல்வி ஸ்தாபனங்களில் வித்தியாப்பியாசம் பெற்ற மக்களுக்கும், உலக சம்பந்தமான கல்வியறிவை ஏனைய கல்வி ஸ்தாபனங்களில் கற்றுத் தேர்ந்த மக்களுக்கும் ஏதாவது வேற்றுமை காணப்படுகின்றதா என்பதைக்கண்டு பிடிப்பதே கஷ்டமாக இருக்கின்றது. மதசம்

பந்தமான பழக்க வழக்கங்களை ஒவ்வொருவரும் கண்டிப்பாகவே அனுசரித்துத் தான் தீரவேண்டுமெனக் கூறப்படும் விஷயம் பொதுவாகவே மாணாக்கர்களால் ஒருவித சுமையாகக் கருதப்பட்டு வருவதுடன், சில சமயங்களில் விளையாட்டாகவும் இழிவாகவும், பரிகாசமாகவுங் கூட கருதப்பட்டு வருகின்றது. மேலும் இத்தகைய ஸ்தாபனங்களைப் பார்வையிடுவோரை, இந்த ஸ்தாபனங்களைப் பார்ப்பதற்காக சுற்றி அழைத்துக்கொண்டு செல்லப்படும்பொழுது பயபக்தியை உண்டாக்கக் கூடிய யாதொன்றையும் அங்கே அவர்கள் காணுவதும் கிடையாது. பிரார்த்தனை அல்லது ஜபம் செய்யும் மண்டபமும் அவருக்குக் காண்பிக்கப்படலாம். ஆனால் அவ்வித ஜபங்களில் கலந்து கொள்ளும்படியான மாணாக்கர்களின் முகங்களை உற்று நோக்கினால் அவர்களுடைய முகங்களில் குறிப்பிடத்தக்கதான யாதொரு கம்பீரமான தோற்றங்களையும் காண்பது அரிதாகும்.

இங்கிலாந்திலுள்ள பழமையான சர்வகலாசாலைகளில் 'சிறு ஆலயங்களை நியமித்தல்' என்பதான நடவடிக்கையையே இங்கு நடைபெறும் சம்பவங்கள் பெரிது மொத்திருக்கின்றன. ஆனால் இம்மாதிரி ஒழுங்காக நடைபெறும் மதசம்பந்தமான அனுஷ்டானங்கள் யாவும் காளாவட்டத்தில் அனுபோகத்தின் பேரில் பார்க்கும்பொழுது யாதொரு விதமான அறிவையோ அல்லது ஒழுக்கத்தையோ புகட்டியிருப்பதாகத் தென்படவேயில்லை. ஆகையினால் சிறு ஆலயங்களிருக்க வேண்டுமென்கின்ற நிர்ப்பந்தமானது அநேக கலாசாலைகளில் ஒழிக்கப் பட்டாய் விட்டது. இம்முறை இன்னும் சிறிது நாட்களுக்குள் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பல்வேறு மதங்களின் ஸ்தாபனங்களிலும் அனுஷ்டிக்கப் படுமென்று எதிர்பார்க்கின்றோம்.

எவ்வாறிருந்த போதிலும் குறித்த ஓர் மதத்தைச் சேர்ந்த ஓர் வகுப்பினரோ, அல்லது குறித்த ஓர் ஸ்தாபனத்தில் கல்வி கற்கும் ஒரு ஜாதியைச் சேர்ந்த சிறுவர்களோ, மற்றவர்களிடமிருந்து வேறாகப் பிரிந்து தனித்து வாசம்செய்வதால், அவர்களிடம் இயற்கையாகவே எத்தகையநிலைமையிலும் மதபேத சம்பந்தமான உணர்ச்சிகள் வளர்ந்து கொண்டு வருவதற்கு இடமேற்படுகின்றது. அம்மாணாக்கர்களோ, இதர மதத்தைச் சார்ந்தவர்களுடன் நெருங்கிப் பழகுவதுமில்லை, இவ்வித நிலைமை ஏற்படுவதால் மக்களனைவரையும் சமமாகப்

பாவித்து நடக்க வேண்டு மென்கிற பரந்த நோக்க மானது அவர்களால் அழிக்கப் படுகின்றது. மேலும் அம்மாதிரியான ஸ்தாபனங்களில் வாசித்துக் கொண்டு வரும் மாணவர்கள் இதர ஸ்தாபன மாணாக்கர்களுடன் தமாஷாக ஏதாவது விளையாட நேர்ந்த போதிலும் கூட, அங்கும் அடிக்கடி அந்த மதபேத சம்பந்தமான உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. மேலும் சாதி வித்தியாசங்களைக் கொண்டா வது அல்லது மதபேத சம்மந்தமான உணர்ச்சிகளைக் கொண்டாவது தனித்தனி வேறுபட்ட இரண்டு பள்ளிக்கூடங் களில் வாசித்து வரும் மாணாக்கர்கள் கிரிக்கட் போன்ற இதர விளையாட்டுப் பந்தயங்கள் விளையாட நேர்ந்தால் சில சமயங்களில் ஆபத்தான நிலைமையும் ஏற்பட்டு விடுகின்றது.

இவை போன்ற காரணங்களால் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களனைவரும் இன்னும் மேலான அறிவுடனும், ஞானத்துடனும், விவேகத்துடனும் நடந்து கொள்ளவேண்டு மென்பதே தற்கால நிலைமையில் இந்தியாவுக்கு அதி முக்கிய மாய் வேண்டற்பாலதாய் இருந்து வருகிறது. இம்மாதிரியான நிலைமையை நாம் அடையவேண்டுமானால் மக்கள் யாவரும் ஒருவருடன் ஒருவர் இன்னும் தாராளமாகவும், சிநேகிதமாக வும் நடந்து கொள்ளுவதற்கான அனேக சந்தர்ப்பங்களை நாம் ஏற்படுத்தவேண்டுபது இன்றியமையாததாகின்றது. மாணாக் கர்கள் யாவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே பள்ளிக் கூடத்தில் ஒரே வித உபாத்தியாயர்களால் உபதேசிக்கப்பட்டும் அவர்களாலேயே நடத்தப்பட்டும் வருவதுடன், யாவரும் பொதுவாக விளையாடுமிடங்களில் அவர்களுக் கேற்படும் சிநேகித சம்பந்தத்தாலும், மேலும் கலாசாலை களிலுள்ள இதர சங்கங்களின் மூலமாகவுமே தான் நாம் கோரிய பலனையடைய முடியுமே யல்லாமல், வேறு எந்த கைய பிரயத்தனமும் நாம் கோரிய பலனையளிக்கவே யளிக் காது. பள்ளிக் கூடங்களிலும், கலாசாலைகளிலும் ஏற்படும் சிநேகிதமானது எத்தகைய நிலைமையிலும், எல்லாவித சந் தர்ப்பங்களிலும், நீடித்து நிற்கக் கூடியதெனவும், அந்த சிநே கிதமொன்றுதான் யாதொரு விதமான பிரதிப் பிரயோஜனத் தையும் கருதாமலேற்படக்கூடிய சிநேகித மென்பதையும் யாவரும் செவ்வனே அறிவார்கள். ஆனால் இந்தி யாவிலேற்பட்டுள்ள பல்வேறு மதங்களை ஆதாரமாகக் கொண்ட கல்வி நிலையங்கள், இந்தியாவில் வாசம் செய்து வரும் எண்ணிறந்த ஜாதியைச்சார்ந்த வாலிப மக்களுக்கு

இத்தகைய சினேகிதப்பான்மையும், ஒற்றுமையும், சம்பந்தமும் அவர்களுக்குள் ஏற்படக்கூடிய எல்லாவிதசந்தர்ப்பங்களையும் நாசமாக்கிக்கொண்டே வருகின்றன.

கல்வித் துறையில் உலக சம்பந்தமான கல்வியும், அறிவுந்தான் மாணாக்கர்களுக்குப் போதிக்கப்பட வேண்டுமென்னும் அவசியத்தைக் குறித்து நாம் அழுத்தந் திருத்தமாகக் கூறிக் கொண்டு வந்தோம். ஆயினும், மாணாக்கர்களின் அறிவு நானாவித வழிகளிலும் விருத்தியாகக்கூடிய விஷயங்களும், கல்வியுடன் சேர்த்து அவர்களுக்குப் போதிக்கப்பட்டாக வேண்டுமென்கிற நிபந்தனையும மாணாக்கர்களுக்கேற்படுத் தப்பட்டிருக்கின்ற பாடத் திட்டத்தில் அவசியம் சேர்க்கப்பட வேண்டுமென்றும் நாம் கருதுகின்றோம். குறிப்பாக விஞ் ஞான சாஸ்திரமானது இன்னும் விரிவாகமாணாக்கர்களுக்குப் போதிக்கப்பட்டதாக வேண்டுமென்கின்ற விஷயமானது அவர் களுக்கேற்பட்டிருக்கின்ற பாடத்திட்ட வரிசையில் முதன்மை யாகவே இருக்கவேண்டுமென நாம் நினைக்கின்றோம். அவ் வாறிருந்தால் மட்டுந்தான் மாணாக்கர்களினுடைய நியாயானு சரமான மனோசக்தியானது அபிவிருத்தியடைந்து, இயற் கைக்காட்சிகள் நிரம்பிய இவ்வுலகில் எல்லாப்பக்கங்களிலும் நீதியும், அமைதியும் குடிகொண்டு உலாவுவதைக் கண்டறிந்து கொள்ள வசதியுண்டாகும். விஞ்ஞான சாஸ்திரத்தின் ஆரா ய்ச்சியும் அறிவும்தான் ஜீவ சாஸ்திரத்தினுடையவும், ஜன சமூகத்தைப்பற்றிய சாஸ்திரத்தினுடையவும், ஆராய்ச்சியும், அறிவுமுட்படவேதான் மூடப் பழக்க வழக்கங்களால் மாணா க்கர்களுக்கேற்பட்டிருக்கும் நம்பிக்கையைத் தகர்த்தெறியக் கூடிய வல்லமை வாய்ந்தது. இயற்கையின் சட்ட திட்டங்க ளையும் குணாதிசயங்களையும் ஆதியிலிருந்தோர் அறிந்து கொள்ளாதிருந்த காரணத்தாலேயேதான் அவ்வித மூடநம்பி க்கைகள் அவர்களுக்கேற்பட்டன. நமது கண்களுக்கு முன் பாக நடந்துவரக்கூடிய சம்பவங்களால் நமக்கேற்படும் அனு போகங்களுக்கெதிரிடையாக, வேறு யாதாமொருவர் நமக்கு என்னதானுரைத்த போதிலும் அவர் எவ்வளவு பெரிய மனி தராயிருந்தபோதிலும்கூட, அவர்களுடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தக்கூடாதெனும் உண்மையை அப்பொழுது தான் அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். உலகமானது பொதுவாகவே எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டி

ருக்கின்றதென்பதையும், ஆதிகாலத்தில் நடந்ததாகக் கூறப்படும் வர்த்தமானங்கள் யாவும் கற்பனாசக்தியின் பயனாக ஏற்பட்ட கட்டுக் கதைகள்தானென்பதையும், அவர்கள் அப்பொழுதான் அறிந்துகொள்ளக்கூடும். இவைகளுக்கெல்லாம் மேலாக, தங்களுடைய அறிவு, ஆராய்ச்சி, நீதி, சன்மார்க்கமாகியவைகளினுடைய உதவியாலும், ஒத்தாசையாலும் தங்களால் செய்யப்பட்ட காரியங்கள் யாவும், தங்களுக்கு முன் சென்றவர்களால் செய்துகொண்டு வரப்பட்ட காரியங்களின் பலன்தானாகுமென இவர்களால் எவ்வாறு கருதப்பட்டுவரப்படுகின்றதோ, அவ்வாறேதான் இவர்களால் செய்யப்பட்டுவரும் காரியங்கள் எவ்வளவு தான் குறைந்த அளவிலிருந்த போதிலும் கூட, தங்களுக்குப் பிறகு பாரம்பரியமாய் வரக்கூடிய மக்களுக்கு உதவியை யளிக்கக்கூடுமென்பதையும் அப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்தவர்களாவார்கள்.

நாம் எப்படியிருந்தால் இரட்சிக்கப்படுவோம், என்ன செய்து கொண்டுவந்தால் முக்தியடைவோம், எப்படி நடந்து கொண்டு வந்தால் மோக்ஷமடைவோமென்பதைப்பற்றிப் போதிக்கும்படியான கல்வி அறிவானது-(அவ்வறிவானது) எவ்வளவு தான் பெருமை வாய்ந்திருப்பதாகக் கூறப்பட்டு வந்த போதிலும் சரியே, அதைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படாமலும், அவ்வறிவை மாணாக்கர்களுக்குப் போதியாமலிருந்தும் வரவேண்டும். மேலும், அவர்களது கடமைகளைக் குறித்தும், மற்றவர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தும் அவர்களது மனத்தில் நன்றாய்ப் பதியும்படி செய்வதற்கு வல்லமை வாய்ந்ததான கல்வி அறிவு ஒன்றை மட்டுந்தான் மாணாக்கர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். கல்வித் துறையில் இவ்விஷயங்கள்தான் சாலவும் சிறந்த முறையாகும்.

"சென்னையில் நடக்கும் துர் ஆச்சாரங்கள் மனிதன் சகிக்கக்கூடியதல்ல. விபூதி பொட்டுகளையும் பட்டை நாமங்களையும் தீட்டிய நெற்றியுடைய பெரிய பெரிய ஆங்கிலப் பட்டம் பெற்ற பண்டிதர்களுடைய சம்பாஷணையை கேட்டதிலிருந்து வெறும் புத்தகங்களைப் படித்து பட்டம் பெற்றுவிட்டதில் மாத்திரம் மனிதனுக்கு அறிவுவந்து விடாதென்று நிச்சயம் செய்து கொண்டேன்"

(லாலாலஜபதி)

துருக்கியும், இந்தியாவும்.

(தோழர் R. சுப்பையா.)

இந்தியநாடு ஆரியக்கொடுமை வாய்ப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அடிமைத்தன்மையில் ஆழ்ந்து இருப்பதினின்றும் தன்னை விடுவிக்க வேண்டின் அது நமது புனித சுயமரியாதை இயக்கத்தைத் தழுவுவதால் மட்டுமேயன்றி வேறொன்றினாலுமியலாதென்பதை துருக்கியின் சென்ற பதினைந்து வருட சரித்திரத்திலிருந்தே நன்கறியலாம்.

துருக்கியர் ஏகாதிபத்தியம்.

துருக்கியர் ஆதியில் மத்திய ஆசியாவில் இந்திய சீன எல்லைப்புற தேசமாய துருக்கி ஸ்தானத்தைச் சார்ந்தவர். இவர்கள் சீக்கியர், கூர்க்கர், பட்டாணியர் போன்று சண்டை செய்யும் ஆற்றலில் உலகத்திலேயே முதன்மை பெற்றவர். அத்தகைய ஆற்றல் வாய்ந்த துருக்கியர் தமது பூர்வீக மதமாகிய துரேனிய மதத்தை விட்டு, அரேபியாவில் புதிதாய் மகமது நபியால் தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாம் மதத்தில் சேர்ந்து அநேக தேசங்களை ஜயித்து, இறுதியாக ஐரோப்பாவில் அக்காலம் மிக உன்னத நிலைமையிலிருந்த கிழக்கு ரோமான் ஏகாதிபத்தியத்தின் தலைநகரான கான்ஸ்டாண்டி நோப்பிளைத் தீவிரமாய்ப் போர்புரிந்து கைப்பற்றி, அதன் இயற்கையமைப்பின் மேம்பாட்டினால் அதனையே தமது தலைநகரமாக்கி, அத்தேசத்திற்குத் துருக்கியென்று பெயர் கொடுத்து, அதற்கு முன்னும் பின்னும் தம்மாற் கைப்பற்றப்பட்ட தேசங்களை அரசாண்டு வந்தனர். அக்காலத்திலிவர்களது பெயரைக்கேட்ட மாத்திரத்தில் நடுங்காத ஐரோப்பிய தேசத்தவரிலர். கான்ஸ்டாண்டி நோப்பிளிலுள்ள மிக அழகான செயின்ட் சோமயா என்னும் கிறிஸ்துவக் கோயிலிலுள்ள விக்கிரகங்களையெல்லாம் எடுத்தெறிந்து விட்டு, அதனையே தமது முக்கிய பள்ளிவாசலாகவும் அமைத்துக்கொண்டனர்.

ஐரோப்பாவின் நோயாளி.

துருக்கி அரசர் மததர்மத்தை காப்பதற்காக இருக்க வேண்டியவரானதினால் இவ்வாறு சிறப்புற்று விளங்கி, மேனாட்டு தேசத்தவர்களுக்கு எப்பொழுதும் சிம்ம சொற்பனமாயிருந்து வந்த துருக்கி ஏகாதிபத்தியம் மதப்பைத்தியத்தின் பயனாய் தன் மகிமையிழந்து தேசங்களிழந்து, ஐரோப்பாவின் நோயாளி மனிதனென்றழைக்கப்பட்டு, சுருங்கக்கூறுமிடத்து சென்றமகாயுத்தத்திற்குப் பின் பூகோளப்படத்திலேயே இல்லாமலழிந்து விடக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டது. முஸ்தபாகெமால் என்னும் ஒரு இயற்கை அறிவு நிரம்பிய சாதாரண மனிதர் அக்காலம் அதனைக் காப்பாற்றியிராவிடின் அது அந்த நிலைமைக்கே திட்டமாக வந்திருக்கும். கெமாலும், அவர் தம் சகாக்களும் தங்கள் தேசம் அந்த நிலைமைக்கு வந்த காரணத்தை ஆராய்ந்து பின்வரும் சீர்திருத்தங்களைச் செய்து முடித்து, சண்டைத்திறனில் தமக்கு மிக்காரிலரென்று காண்பித்தது போலவே, தேச முன்னேற்றத்திலும், சுயமரியாதைக்கொள்கை எத்தகைய உதவிபுரியக் கூடியதென்பதனையும் நிரூபித்து விட்டனர். அச் சீர்திருத்தங்களில் முக்கியமாவன.

கெமால் சீர்திருத்தம்.

1. மதசம்பந்தமான கலீபாவாகிய சுல்தானை நீக்கி நாடு கடத்திவிட்டு குடியரசு ஏற்படுத்தியது.

2. அரசாங்கத்திற்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லையென்று கண்டது.

3. மதப் பள்ளிக்கூடங்களை அறவே யொழித்து மத சம்பந்தமில்லாத கணக்கற்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியது.

4. மத சந்நியாசி ஆசிரமத்தையே யகற்றி அன்னாரது சொத்துக்களைக் கைப்பற்றியது.

5. அற நிலையங்களை அரசாங்கத்திற்குரித்தாக்கியது.

6. ஷரீயத்தை (இஸ்லாமிய சட்டத்தை) நீக்கிவிட்டு ஸ்விஸ் சிவில் சட்டம், ஜர்மன் வியாபாரச் சட்டம், இட்டாலியன் கிரிமினல் சட்டம் இவைகளைக் கைக்கொண்டது.

7. பெண்களுக்கும் ஆடவர்க்கொத்த சுதந்திர மளித்தது.

8. பெண்கள் முக மூடியை (கோஷாவை) எடுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றியது.

9. ஆணும் பெண்ணு மொன்றாயிருந்து கல்வி பயிலக் கூடிய பள்ளிக்கூடங்களேற்படுத்தியது.

10. கணவன் தன் இஷ்டம்போல் 'தலாக்' சொல்லி மனைவியை நீக்குதல் செல்லாதென்றும், இருவரும் கோர்ட் மூலமே விவாகரத்து செய்து கொள்ளவேண்டுமென்ற சம சட்டமியற்றியது.

11. மனிதர்கட்குள் உயர்வு தாழ்வு காட்டக்கூடிய பட்டங்களை யகற்றி விட்டது.

12. முன்பு காக்கப்பட்டிருந்த ஞாபகார்த்த உருவச் சிலை முதலியவற்றை ஏற்படுத்தியது.

13. பழைய அராபிக் எழுத்தை நீக்கி, லாட்டின் எழுத்தைக் கைக்கொண்டது.

14. வெள்ளிக்கிழமை விடுமுறையை விடுத்து ஞாயிற்றுக்கிழமை யாக்கியது.

15. முன்பு கையாண்டு வந்த இஸ்லாமிய வருஷக்கணக்கை விடுத்து, மேனாட்டாரனுசரிக்கும் கிறிஸ்து பிறந்த வருஷக் கணக்கைக் கைக்கொண்டது.

16. நாடகம், சினிமா முதலியவைகளை ஆடவரும் பெண்டிரும் கண்டு களிக்கும்படி செய்தது.

17. கால்பந்து முதலிய மேனாட்டுமாணவர் விளையாட்டுகள் ஏற்படுத்தியது.

18. அறியாமையை யகற்ற ஆடவருக்கு கட்டாயப்படிப்பு ஏற்படுத்தியது.

சுயமரியாதை இயக்கம்.

இவற்றை நன்றாயாராயின் இவை மெது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளேயன்றி வேறன்று என்று தெரியலாம். ஆயினும் ஒரு வித்தியாசம் மட்டும்கவனிக்கலாம். சரீர அடிமைத் தன்மை, அறிவினடிமைத் தன்மை என்று இருவித அடிமைத் தன்மைகளையும் ஒழிப்பதே சுயமரியாதைக்காரரது ஆர்வமாயினும், இப்பொழுது அவர்கள் முதலில் விழைவது

அறிவினடிமைத் தன்மையை அகற்றுதலேயாம். பின்னைய தே முன்னையதற்கு வழிகாட்டியாயிருந்தது. ஆதலாலது ஒழியின் முன்னையது தானாகவே இறந்துபடுமென்பது அவர்களது உறுதியான கொள்கை. இந்து மதத்திலுள்ள பல சமய, சமூகக் குறைபாடுகள், உதாரணமாக ஜாதி வித்தியாசமும் அதனாலேற்படும் ஒற்றுமை யின்மையும், விதவா விவாகமின்மை, பெண்களுக்கு சொத்துரிமையின்மை, மணரத்து இன்மை, முதலியவை இஸ்லாம் மதத்தில்இல்லாமலிருந்தமையால் துருக்கி சுயமரியாதைக்காரர்கள் இரண்டுவித அடிமைத்தன்மையும் ஒரே சமயத்தில் அகற்றிக்கொள்ள முடிந்தது. இந்த ஒரு வித்தியாசத்தைத் தவிர மேற்கண்ட சீர்திருத்தங்கள் நம் சுயமரியாதைக் கொள்கைகளின் பாற்பட்டவையேயென்று தெள்ளிதிலறியலாம். நம் சுயமரியாதை இயக்கத்தை இழிதகையாளர் எவ்வாறு அறிவின்மையாலும், பொறாமையாலும், சுயநன்மையை யுன்னியும் தேசத்துரோக இயக்கமென்றும், சமய துரோக இயக்கமென்றும் பிதற்றுகிறார்களோ அவ்விதமே துருக்கிய சீர் திருத்தங்களையும் சொல்லலாம். அன்றியும் அவற்றுள் சில கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவையென்றும் குறை கூறலாம். ஆயினும், அவை அத்தகையனவல்லவென்பது அறிவாளிகளாராயின் நன்கு புலப்படும். நீதி இலாகா மந்திரி புதிய சிவில் சட்டத்தை 1926ம் வருடம் பிப்ரவரியில் அங்கோராவில் முதல் மந்திரியிடம் சமர்ப்பித்த பொழுது நிகழ்த்திய சொற்பொழிவு நமது இயக்கத்தை குறைகூறி எதிர்ப்பவர்கட்கு ஆணித்தரமான பதிலாயிருக்கின்றது.

"மதத்தின்மேற் கட்டப் பட்ட சட்டங்களையுடைய தேசங்கள் சிறிது காலத்திற்குப் பிறகு தேசத்தினுடையவும், குடிகளுடையவும் அவசியங்களைத் திருப்பிச் செய்ய முடியாதவையாய் விடுகின்றன.

ஏனெனில், மதங்கள் முடிந்த முடிவுகளையே தெரிவிப்பதாய்க் கூறுகின்றன. ஆனால், வாழ்க்கை சலனத்தோடு கூடிய மிருதுத்தன்மைகொண்டது; அடிக்கடி மாறுதல்களை கேட்கின்றது. ஆகையால் சமய சட்டங்கள் உண்மையான மகிமையையாவது பொருளையாவது உடையனவாயிருத்தலியலாது. அவை இறந்து பட்ட சொற்களினுருவமாய் விடுகின்றன.

சமய வாய்ப்பட்ட சட்டங்கள் தம் ஜன சமூகத்தைக் காட்டுமிராண்டித் தனத்திலாழ்த்தி வைப்பதோடு கூட முன்னேற்றத்துக்கு முக்கிய தடைகளுமாய் விடுகின்றன.

மதத்தின் பேரால் கட்டப்பட்டு மாற்றப்படக் கூடாதநம் சட்டங்கள் நம் துருக்கியரை மத்தியகால வாழ்க்கையிலேயே ஆழ்த்தி வைப்பதற்கு முக்கிய ஏதுக்களாயிருந்திருக்கின்றன. நவீன நாகரீகத்தின் முதல் அடையாளம் மனித வாழ்க்கைகளையும், மதத்தையும் பிரித்தலாகும்.

நவீன நாகரீக தேசமெதிலுமிதற்கு இடங்கொடுக்கக் கூடாது. மதம் மக்களது மன உணர்ச்சியில் மட்டும் இருத்தல் வேண்டும்; சட்டங்களுக்குள் அது தலையிடுதல் கூடாது.

இந்தப் புதிய சிவில் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் அந்நாளே துருக்கியர் தங்களைச் சென்ற பதின்மூன்று நூற்றாண்டுகளாய் அடக்கி ஆண்டு வந்தமத (சம்பந்தமான) பொய் நம்பிக்கைகளினின்றும் பழக்க வழக்கங்களினின்றும் விடுவிக்கப்பட்டவராவர். நம்நாடு உயிரும், அபிவிருத்தியுமுடைய நவீன நாகரீகத்திலிறங்கும்.''

இன்னும் கெமாலின் சகாக்களிலொருவராகிய ஜெளரிபே கூறியதாவது:—

''நமது மத வியாக்யானிகள் மத சட்டங்களை மாறுதல், சீர்திருத்தம் இவை கட்குட்படாதவை யென்று நம்பினார்கள். அதனாலவர்கள் வளர்ச்சியும் அபிவிருத்தியும் வளரவொட்டாமல் எல்லாக்கதவுகளையும் அடைத்து விட்டார்கள். அதனாலிதுவரை இஸ்லாம் அதே நிலைமையிலிருந்து வந்திருக்கிறது. அபூஹனிபேயும் மற்ற நான்கு பெரிய இமாம்களும் வாழ்க்கையின் வசியத்துக்குத் தகுந்தபடி எப்பொழுதும் புதுச்சட்டங்களை, அவைகள் கட்டளைகளுக்கு மாறுதலாயிருந்தாலும் கூட ஏற்படுத்திக்கொண்டார்கள். அதே மாதிரியான செய்கையை நாமும் மதவிஷயத்தில் பின் பற்றியிருந்தால், நவீன முற்போக்கிற் கேற்றவாறு இஸ்லாமும் கொண்டு வரப்பட்டிருக்கும். ஆனால் குருமார் அவ்விதம் செய்யவில்லை. அவர்கள் கண்மூடித்தனமாய் பழைய விதிகளையே பின் பற்றி வந்திருக்கின்றார்கள்.

இஸ்லாமின் இச்சட்டங்கள் அந்தக் காலத்திற் கேற்ற வாறு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டன வென்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

காலமாறுதலுக் கேற்றவாறு சட்டங்களும், மதநம்பிக் கைகளும் கூட மாறுதலடைய வேண்டுமென்பதையும், மற்ற படி அபிவிருத்தி காணமுடியாதென்பதையும், அத்தகைய சீர் திருத்தமில்லாத நிலைமையில் வாழும் ஒரு கூட்டத்தார் மற்ற வர்களுக்கு அடிமைப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் உணரவில்லை.

ஒரு பழைய பத்வாவிற்கும் கட்டுப்பட்டிருப்பது சலனத் தையும், அபிவிருத்தியையும் தடுக்கிறது.

அது அந்தப் புராதன கால சமூக, பொருளாதார, வை தீக, இராஜீய கொள்கைகளோடு கட்டுப்பட்டதாயிருக்கிறது. சலனமில்லாத எதுவும் பிற்போக்கடைதல் திண்ணம்.

இது வாழ்க்கையின் பொது சட்டம். வாழ்க்கையே முக் கியமானது; பழக்க வழக்கங்கள் அலங்கார மட்டுந்தான்.

சில பழக்க வழக்கங்கள் கடவுட்டன்மை வாய்ந்தனவாயி ருக்கலாம். ஆனால் அவைகளின் கடவுட்டன்மை அவைகளி னுபயோகத்தைப் பொறுத்திருக்கிறது.

பழங் கதைகள் வாழ்க்கைக்குத் தீமை விளைவிப்பதா யிருந்தாலவைகளை வைத்திருப்பது மூட்டாள் தனம்.

பழைய மனப்பான்மையையும், பழைய பழக்க வழக்கங் களையும் வைத்துக்கொண்டு நாம ஜீவித்து முன்னேற்றமடை ந்து பலவான்களாயிருக்க முடியுமா ?

நாம ஐரோப்பியரது கலைகளை மட்டும் எடுத்துக் கொண்டு அவர்களது பகுத்தறியும் மார்க்கத்தை விட்டுவிட முடியுமா ?

அவ்விரண்டும் ஒன்றினின்று ஒன்றைப் பிரிக்க முடியாத வை.

கலப்பற்ற பகுத்தறிவின் மேல் கட்டப்பட்ட ஒரு சாஸ்தி ரீய படிப்பு முறையை ஐரோப்பா இப்பொழுது கையாண்டு வருகிறது.

இங்கு இந்த 1926-ம் வருடத்தில் ஒரு பழம் புஸ்தகத்தி லுள்ள பழைய ஸ்லோகத்தின்படி ஒரு குரு தீர்மானித்து நடத்துகிறார். இஸ்லாமிய தேசங்களில் இராஜீயம், நாகரீகம், வாழ்க்கை, உடை, உணவுங்கூட சமய சட்டங்களாலாளப் படுகின்றன.

பல நூற்றாண்டுகட்கு முன்னுள்ள இமாம்களது தீர்மானத்தில் நாம் மூழ்கி விட்டோம். இஸ்லாமிய தேசங்களில் மத சம்பந்தமான பழக்க வழக்கங்களே முன்னேற்றத்துக்கு முக்கிய தடைகளாயிருந்து வந்திருக்கின்றன.

வர வர இராஜீய, சமூக வாழ்க்கை மட்டுமன்றி ஆத்மார்த்த வாழ்க்கையும தயங்கி விட்டது. எல்லா மதங்களின் லட்சியமாகிய நன்னடத்தையுங்கூட க்ஷீணித்து விட்டது. உதாரணமாக சமூகக் கட்டுப்பாட்டில் பல மனைவியரை மணத்தலென்ற விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். யூதர்களது மதமாகிய ஜுடேயிசமும், கிறிஸ்து மார்க்கமும் மதக் கோட்பாட்டுப்படி பல மனைவியரை மணத்தலைத் தடுக்கவில்லை. ஆயினும் கிறிஸ்துவர்கள் ஐரோப்பாவின் சமூக அவசியத்திற்கொப்ப அதைச் சீர்திருத்திக்கொண்டு பலதார மணத்தைத் தடுத்துவிட்டார்கள். ஆகவே கிறிஸ்துவ மதத்தின் பழைய சட்டங்களுக்கு ஒப்ப நடக்காமல் ஐரோப்பா தன்னுடைய புதிய கொள்கைகளுக்கொப்ப நடக்கும்படி கிறிஸ்துவ மதத்தைச் செய்து விட்டது. அவ்வாறின்றி இஸ்லாமியர் நம்முடைய சட்ட கர்த்தர்களின் மூட வைராக்கியத்தைத் தடுத்திருப்பதே கிடையாது. இஸ்லாமிய சரித்திரத்திலேயே மகமதியர்கள் காலதேச வர்த்தமானத்திற்குத் தக்கபடி தம்மைச் சீர்திருத்திக்கொண்டு போனவர்களே யல்ல. பழைய பழக்க வழக்கங்கள் மகமதியரை ஸ்தம்பிக்கச் செய்து விட்டன.''

இந்தியா.

நவீன துருக்கியின் சீர்திருத்தக்காரரது வார்த்தைகளை இவ்வளவு விரிவாயெடுத்தெழுதியது, அவை நம்சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கும் போலித் தேசீய, சமயவாதிகட்குத் தகுந்த சரித்திர பூர்வமுமான பதிலாயிருப்பதினாலே தான். மேற்கண்டவைகளில் இஸ்லாம் என்பதை இந்து என்று மாற்றிவிட்டால் மூடப்பழக்க வழக்க வழக்கங்களை சுருதிஸ்மிருதிக

ளிலிருந்து ஆதரிக்கும் நமது, படித்தும் பயனிலாராஜா பக தூர் ஆச்சாரி, சத்தியமூர்த்தி போன்றவர்கட்கு அவைதகுந்த சவுக்கடியாகும். உலகிலுள்ள முக்கிய மதங்களுள் இறுதி யாய்த் தோன்றிய மதக்கொள்கைகளையே அவர்களவ்வாறு கண்டிப்பார்களானால் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட் டதும், காலவரையறைக்குள் அடங்காததுமான சாஸ்திரங்க ளிலுள்ள சுலோகங்களிலிருந்து சாரதா சட்டத்தை எதிர்ப் பது எவ்வளவு அறிவீனம்! இத்தகையோர் மலிந்து தேசிய வாதிகளாய்க் கருதப்படும் நாடு எவ்வாறு முன்னேற்றமடைய முடியும்? இத்தகைய மக்களை ஈன்ற இந்தியத் தாய பன்னூ றாண்டுகளாய் அடிமை வாழ்விலிருப்பது ஒரு ஆச்சரியமே யல்ல. இனியும் விடுதலைக்கு எத்தனை ஆண்டுகள் செல்ல வேண்டுமோ என்ற ஆசங்கையே மேலிடுகின்றது. அறிவென் பது யாவரிடத்திலு மிருக்கப்பட்ட ஒன்று. அதனை உப யோகிக்காமல் ஒவ்வொருவரும் மற்றொருவர் கூறியதைப்பகுத் தறிவின்றி ஒப்புக்கொள்ளுதலெவ்வாறு பொருந்தும்?

மேலே கூறியபடி தேச சாஸ்திரங்களை படிப்பது நேரப் போக்கிற்கன்று. ஐரோப்பியரை முதலில் துருக்கியர் ஜயித்த தற்கு காரணமென்ன? பின்னர் அவ்வாறு ஜயிக்கப்பட்ட ஐரோப்பியரால் அவர்கள் முறியடிக்கப்பட்டதற்குக் காரண மென்ன? என்பவற்றை நமாராய்தல் வேண்டும். துருக்கி யர் இஸ்லாம் மதத்திற் சேர்க்கப்பட்டபொழுது அம்மதமா னது அக்காலத்திற்குத் தக்கதாயும், தனக்கு முன்னுள்ள மற்ற மதங்களின் குற்றங்குறைகளை நீக்கியதாயும், அக்காலத் தில் மிகுந்த முற்போக்குடையதாயுமிருந்தது. மகமது நபி கூறியபடி "யுத்தத்தில் உயிர்பிழைத்தால் கீர்த்தியோடு கூடிய ஜெயம். மடியின் சுவர்க்கம்" என்பதையும், "எல்லா முஸ் லிம்களும் சகோதரரென்பதை அறியுங்கள்" என்பதையும் அவர்கள் கடவுள் வாக்காய் நம்பியதால் வீரமும், ஒற்றுமை யும் அதனாலேற்படும் தைரியமும் அவர்கட்கிருந்தன. பெண் கள் சொத்துரிமை முதலிய மற்ற மதஸ்தரிடம் காணப்படாத முற்போக்குடைய சட்டங்களையும் அவர்களனுசரித்தார்கள். இச்சட்டமொன்றே மனிதனை எவ்வாறு வீரராக்குமென்று நாம் தெளிந்து கொள்ளலாம். இத்தியாதி காரணங்களாலே யே மகமதியர் அந்த நாட்களில் அவ்வாறு வெற்றிபெற்றனர். ஆனால் காலதேச வர்த்தமானத்திற்குத் தக்கபடி தங்கள் மதக் கொள்கைகளையும், சட்டங்களையும் திருத்தி யமைத் துக் கொள்ளாது "தங்கள் சாஸ்திரங்களில் ஒரு எழுத்தை

யாவதுமாற்றக்கூடாது, உலகமுள்ளளவும் அவைகள் ஊர்ஜிதம் இஸ்லாமைத் தழுவாத ஒவ்வொருவரும் காபீர்'' என்ற மூட நம்பிக்கையையும், அந்நம்பிக்கையைப் பொறுத்த செய்கைகளுமே அவர்களை, மதத்தையும், சட்டத்தையும், சகோதரத்துவத்தையும், அறிவு வளர்ச்சி முறைகளையும் காலத்திற்குத் தக்கபடி மாற்றிவந்த மேனாட்டரர் ஐயிக்கும்படியாயிற்று. இதனையே கெமாலும் அவர் கூட்டாளிகளும் ஆராய்ந்து கண்டு தீயவைகளையகற்றி, நன்மை பயக்கூடியவைகளைச் சேர்த்து, மேனாட்டாரும் தம் நாட்டை இப்பொழுது கௌரவிக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டனர் வெள்ளையருடையவும், கிரிகோயின் வருஷக்கணக்கும், ஞாயிறு விடுமுறையும், லாட்டின் எழுத்தைக் கைக்கொண்டதும், கிறிஸ்து மதத்தை அநுஷ்டிக்கப்போகும் மனப்பான்மையோடு கூடியவையல்ல; எந்தெந்த நாட்டினாது எந்தெந்த அநுஷ்டானம் நவீன நாகரீக முற்போக்கிற்குச்சாதகமாயிருக்கின்றதோ, அதனைக் கைக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடுதான். மேனாட்டிலெங்கும் ஞாயிறு விடுமுறை நாளாயிருக்கும்பொழுது துருக்கி மட்டும் பழையபடி வெள்ளியையே அவ்வாறு கருதி வருமானால் வியாபார நடவடிக்கைகள் எத்தகைய இடைஞ்சல் கட்குட் படுமென்பதனை நாமே யூகித்துக்கொள்ளலாம். இக்கருத்துக்கொண்டே ஜப்பானியரும் ஞாயிற்றையே விடுமுறை நாளாய் மாற்றிவிட்டனர். இன்னும் ஆகாயக்கப்பலிலிருந்து போர் புரியும்பொழுது வைதீக இந்துவின் ''பன்னிரண்டாறு பஞ்சகச்ச உடை'' பொருத்தமுடையதாமா? என்பதனை நாமே கவனித்துக்கொள்ளலாம். இந்தியாவில் இஸ்லாமியப் பிள்ளைகள் சீக்கிரம் படிக்க முடியாமைக்கு அராபி எழுத்துக்களே முக்கியகாரணமென்று இஸ்லாமியரே சொல்லுகின்றனர்.

ஆகவே நவீன துருக்கி நமது நாட்டினருக்கு எவ்வளவு பொருத்தமான எடுத்துக்காட்டாகுமென்பது நன்கு விளங்கும். முஸ்தபா கெமால் எவ்வாறு தன் தேசத்துக்குறைகளைக் கண்டு உணர்ந்தாரோ அவ்வாறே நமது மாபெருந்தலைவர் நமது குறைகளை நன்காராய்ந்து நமது சுயமரியாதை இயக்கத்தினைத் தோற்றுவித்து, அதற்குத்தனது உடல் பொருள் ஆவி மூன்றையும தத்தம செய்து வருகின்றார். அவரது சொற்பெருக்கிலோ, எழுத்திலோ, செய்கையிலோ எதுவும் மனிதனது இயற்கை அறிவுக்கு முரணானதாகக் கண்டு பிடிக்க முடியவே முடியாது. ஒவ்வொரு இந்தியனும் முக்கி

மாம்ச ஆகாரமும், பார்ப்பனர்களும்.

இந்து மதத்தில் பசு மிகவும் மேன்மையாகப் பாவிக்கப் படுகிறதென்றும், முக்கியமான தெய்வமென்றும், அதை வதை செய்வதால் இந்து மதத்திற்கு பெரும் பங்கமேற்படுகிற தென்றும், இந்துக்கள் பெரும் தடை செய்கின்றார்கள். பூர்வீக காலத்திலிருந்த இந்து மதத்திலேயே பசுவதை செய்வதை ஹலாலாக்கி வைத்திருந்தது மட்டுமல்லாமல் முஸ்லீம்கள் அவ்விறைச்சியை எவ்வாறு புசிப்பது அவர்கள் மார்க்கத்தில் கூடுமானதாயிருக்கின்றதோ அதே போல் இந்துக்களும் அம்மாமிசத்தை புசித்து வந்தனர் என்ற விஷயம இந்து மத ஆராய்ச்சி நிபுணர்களின் ஆராய்ச்சியில் மறைந்திருப்பதன்று. இவ்வாறு இந்து மதத்தில பசு வதை செய்வது சரியென்றும், பலி செய்யப் பட்ட பசுவின் மாமிசத்தை புசிக்கலாம் என்றும், இந்துவல்லாத மத ஆராய்ச்சி நிபுணர்கள் எத்தனையோ வியாசங்களைப் பிரசுரித்திருக்கின்றார்களே யாயினும் இவைக்கு வங்காள பிரபல பூர்வீக மத ஆராய்ச்சியில் இந்து நிபுணரான ராஜா, ராஜேந்திரலால் மத்ரா எல். எல். டி., சி. ஐ இ., அவர்களால் எழுதப்பட்ட ஓர் புத்தகத்தில் "இந்து ஆரியன்"

யமாய் தமிழ் மகனும் அவற்றை நன்கு ஆராய்ந்து தெளிந்து தேச சரித்திரங்களையும் படித்து எக்காரணத்தால தோற்றடிக்கப்பட்ட இந்துக்கள் சந்திரகுப்தா அசோகர், கனிஷ்கா காலங்களில் ஆப்கானிஸ்தான் உட்பட இந்தியாவை ஒரு குடைக்கீழாண்டன ரென்றும், பிறகு சங்கரர், சம்பந்தர் [சைவர்] முதலிய பார்ப்பனர் பௌத்த சமணசமயங்களை விரட்டிய பின்னர் மறுபடியும் இந்தியா அடிமை வாழ்வெய்திற்றென்றும் கண்டு சுயமரியாதை இயக்கக்கொள்கைகளைத் தீவிரமாய்க் கைக்கொண்டாலொழிய நாட்டின் விடுதலை, சுயராஜ்யம் எல்லாரும் பகற்கனவாகவே முடியும். நவீன துருக்கியர் கொள்கையையே நாமும் கைக்கொள்ளவேண்டும்.

என்ற மகுடம் சூட்டப்பட்ட 6-வது அத்தியாயத்தில் கூறப் பட்டிருக்கும் விஷயத்தை நாம் கீழே குறிப்பிடுகின்றோம்:—

அப்புத்தகத்தில் இந்துமதக் கோட்பாடுகள் எவ்வாறு போதிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதை இதைப் படிக்கும் நண்பர்களுக்கு நன்கு புலனாகிவிடும், ஆனால் அவர் புத்த மதத்தைச் சார்ந்தவரோவென நீங்கள் நினைக்கக்கூடும். ராஜா சாகிப் அவர்கள் வங்காள வைஷ்ணவர். அவர் தமமுடைய மேலே கூறப்பட்ட புத்தகத்தில் பூர்வீக இந்துக்களின் மதக் கோட்பாடுகளை மிகவும் ஆராய்ச்சியுடன் வரைந்துள்ளார். அவர் கூறுவதாவது:—

"இப்பிரச்சினையின் மகுடமே என் தேச நண்பர்களில் பெரும்பான்மையோர்களின் மனதில் பெரும் வெறுப்பை யுண்டு பண்ணுப. இமாலய பர்வதத்தைக் கடந்து வரும்ஆரி யர்களின் மதக் கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்வதில் நமக் குக் கிடைக்கும் அத்தாட்சிகளே இவ்விஷயத்தில் விவாதிப்ப தற்கு போதிய அத்தாட்சியாகும்.

பசு மாமிசத்தை உணவாக புசிக்கலாம் என்று நினைத்த வுடனேயே இந்துக்களின் மனம் புண்பட்டு விடுகிறது. ஆயி ரக்கணக்கான இந்துகள் தாமென்ன! லட்சக்கணக்கான இந்துமதப் பற்றுடைய இந்துமத நிபுணர்களும் கூட பசுமாமி சம் என்ற பெயரையுங் கூட வாயால் சொல்ல அருவறுக்கிறார் கள். நம நாட்டில் பசு வதை செய்யும் விஷயத்தில் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் உயிரப் பிராணிகளை அறுப்பதால் சில ஆத்மாக்கள் அமை தியாக இருந்தது மட்டுமல்லாமல், அவ்வாறு அறுக்கப் படுவது விருந்தினர்களுக் கெனக் கருதப் பட்டும் வந்தது. மேலும், இறந்து போன இந்துவுடன் ஓர் பசுவையும் சேர்த்து மயானக் கரையில் வைத்து எரிக்கப்பட்டு வந்தது. இவ்வந்த ரங்கமான விஷயத்தை வெளியிடுவதனை நிமித்தம இந்துக்களின் தற்போதைய கிளர்ச்சிகளை யுணர்ந்த இந்தியர்களுள் பெரும் ஆச்சரியத்தையும கிளர்ச்சியையும உண்டுபண்ணும். இவ் விஷயங்களை நான் எந்த கிதாப் (புத்தகம்) பிலிருந்து எடுத் திருக்கின்றேனோ அக்கிரந்தங்களில எத்தகைய சந்தேகமும் அதிருப்தியும் கொள்ள முடியாது.

புரொபசர் வில்சனின் ஆராய்ச்சி.

என் தேச நண்பர்களில் யார் தக்க கல்வி கற்றிருக்கிறார்களோ அவர்கள் வேதங்களில் 'கோ மேதம்' 'அஸ்வமேதம்' என்று பசுவையும் குதிரையையும் பலி கொடுக்கும் யாகங்கள் இருப்பதை நன்கு அறிவார்கள். அவ்யாகத்தின் தாத்பரியம் கால்நடை மிருகங்களை பலி செய்வதே. அவ்வாறு தக்க கல்வி கற்றவர்கள், பலி செய்ய வேண்டுமென்றிருப்பதை உதாரணமாக வரையப் பட்டிருக்கிறதெனக் கருதுகின்றார்கள். அவர்கள் அவ்வாறு மேற்பார்வையாகப் பார்த்து உதாரணமாகக் கூறப்பட்டிருக்கிறதெனக் கருதி விடுவதால் அதன் அந்தரங்கங்கள் மறைவாக இருந்து விடுகிறது. ஆகவின் அத்தகைய பலி அமுலில் கொண்டுவரப்பட்டதன்று என ஜனங்கள் கருதிக்கொள்ளுகிறார்கள்'' அதே போல் புரொபசர் வில்சன் அவர்கள் இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்வதற்காக நாடி முதன் முதலாக ஆராய்ச்சிசெய்ய ஆரம்பஞ் செய்த போது அவருக்கும் இதன் அந்தரங்கங்கள் சரிவர விளங்காமல் அவரின் யோசனைக்கும் எட்டவில்லையாயினும் அத்தகைய கல்வி நிபுணர்கள் போன்றவர்களின் பார்வைக்கும் அந்தரங்கங்கள் மறைந்திருப்பது முடியாத காரியமாகையால் அவர் மேகாவத் மொழி பெயர்ப்பின ஓரிடத்தில் குறிப்பிடுவதாவது:—

கோமேதம், அஸ்வமேதம் எனப்படும் யாகங்களில் பசு குதிரை இவைகளை பூர்வீக காலத்தில் இந்துக்கள் பொதுவாக பலி செய்து வந்தனர். இந்தப் பலியானது உண்மையான பலியல்லவென்றும், பலியின் பாவனையாகச் செய்யப்பட்டதென்றும் கூறப்படுகிறது. அதாவது:—

பலியாக குறிப்பிடப்பட்ட ஒரு பசுவின் மீது ஏதாவது ஓர் அடையாளத்தைப் போட்டு அதை உயிரோடு விடப்பட்டு வந்தது. ஆனால் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் வாசகங்களும் இந்துக்கள் செய்யும் வேலைக்கு உதவியாகத் தெரியவில்லை. ஏனெனில், பசுவின் இரத்தம் கடலைப் போல ஆகவேண்டுமென்று கூறப்பட்டிருப்பதன் உண்மையான வியாக்கியானம் பசுவின் இரத்தத்தையே வெள்ளமாக ஓட்ட வேண்டுமென்பதேயன்றி பசுபலி யென்று வாயால் சொல்லிஒரு குறியைப்போட்டு அப்பிராணிகளை வெளியில் ஓட்டி விடுவது பலியாகமாட்டாது. பசு பலி செய்ய வேண்டுமென எந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறதோ அப்புத்தகத்திலிருக்கும் வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு:—

"பசு சந்ததிகளின் இரத்தம் ஆறாகக் கிளம்பி ஓடிற்று."

புரோபசர் அவர்கள் எவ்விஷயத்தில் அத்தாட்சிகள் காட்டுகின்றாரோ அவ்விஷயத்தில் ஜனங்கள் முன்னமே விவாதம் செய்திருக்கின்றார்களாயினும் பலி செய்ய வேண்டுமென வேதத்தில் கண்ட வாக்கியத்திற்கு இரத்தத்தை ஓட்டவேண்டுமென்றே பதில் கூறி இருக்கின்றார்கள் சிலர் அவ்வாக்கியத்திற்கு நேரான வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ரிஷிகள் விருந்தில் பசு மாமிசம்.

வஸிஷ்ட ரிஷியானவர் விஸ்வாமித்திரர், ஜனகர், சத்தியானந்தர், ஜமதக்கினி முதலிய ரிஷிகள், சிநேகிதர் ஆகியவர்களுக்கு விருந்தளித்தார். அவ்விருந்திற்காக ஓர் கொழுத்த பெண் பசுக்கன்றை அறுத்தார். ஜமதக்கினிக்கு விருந்துக்குச் சொல்ல போயிருந்த வசிஷ்ட ரிஷி சாப்பாட்டின் இன்பத்தையும் அதன் திவ்ய வாசனைகளையும் கூறுகையில்அவர் கூறியதாவது:—

பசுக்கன்று அறுப்பேன், நெய் சாதம் சமைக்கப்படுகிறது. நீங்கள் ஓர் படித்த கல்விமான்; நானும் ஓர் படித்தவன்; ஆதலின் நீங்கள் என் விருந்துக்கு வந்து நாங்கள் சமைத்து வைத்திருக்கும் பசு மாமிசம், நெய் சாதம் இவைகளைச் சாப்பிட்டு எங்களுக்கு ஆசி கூறும்படியாக வேண்டுகிறேன்.

இவ்விஷயங்கள் பூராவும் ஓர் சரிதையிலிருந்து எடுக்கப்பட்டதில் எத்தகைய சந்தேகமும் கிடையாதாயினும், இத்தகைய விஷயங்களை ஓர் நிமிஷத்திற்காவது இட்டுக்கட்ட முடியாது என்பதும் திண்ணம். ஏனெனில் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டுள்ள சரிதையின் ஆசிரியருக்கு இதை படிக்கும் பொது ஜனங்களின் மனம் கொதிப்படையு மென்பது தெரிந்திருப்பதுடன், இல்லாததை இட்டுக்கட்டி இத்தகைய விஷயங்களை எழுதத்துணிய மாட்டார்.

விருந்தாளிக்கு மரியாதை.

கோல்புருக் என்ற ஒருவர் ஹிந்து மதக் கோட்பாடுகளை மட்டும் ஓர் புத்தமாக எழுதியிருக்கிறார். அவர் அப்புத்தகத்தில் கூறுவதாவது:—

பூர்வீக காலத்திலிருந்த ஹிந்துக்கள் தங்கள் வீட்டிற்கு யாராவதொரு விருந்தாளி வந்தால் அவருக்காக ஓர் பசுவை அறுப்பது பொதுவான வழக்கமாக இருந்தது. ஆதலின் அவருக்குப் பசுவை அறுப்பவர் என்று கூறப்படுகிறது.

இந்துக்களின் விவாக காலத்தில் பசுவை அறுப்பதற்காகச் சொல்லப்படும் மந்திர சம்பந்தமான விஷயங்களை கூறுகையில் அவர் கூறுவதாவது:—

நான் இவ்விஷயங்களை எந்தப் புத்தகத்திலிருந்து ஆராய்ச்சி செய்தேனோ அப்புத்தகத்தில் கூறுவதாவது, வரவேற்கத் தக்க விருந்தினர்களான கூர்த், புரோஹித், சன்யாசி, ராஜா, மாப்பிள்ளை, சினேகிதர், மற்றும் கௌரவிக்கத் தக்க விருந்தினர்கள் இவர்களுக்காக வேண்டி ஒரு பசுவைக் குறிபார்க்கப் பட்டு அறுப்பதற்காக வேண்டி கட்டிவிடுகின்றார்கள். ஆதலின் இவர்களுக்கு பசுவைக் கொல்லுகிறவர்களென்று கூறுகின்றார்கள்.

மனுஸ்மிருதியில் பசு மாமிசம்.

எக்காலத்திலுமே பசு மாமிசம் சாப்பிடாலாமென மனுஸ்மிருதி அனுமதிக்கிறது. ஆனால் அதைச் சாப்பிடுவதற்கு முன்ஒரு துண்டைத் தேவதைகளுக்கென்றாவது, பெரியோர்களின் ஆத்மாக்களுக்கென்றாவது, விருந்தாளிக்கென்றாவது மனதில் ஞாபகம் செய்து கூப்பிட வேண்டும். மேலும் மனுஸ்மிருதியில் வரையப்பட்டிருப்பதாவது:- யாதொரு மனிதன் கிரயத்திற்காவது, இலவசமாகவாவது பசுமாமிசத்தை வாங்கி தேவர்களுக்காவது அல்லது ஆத்மாக்களுக்காவது ஸ்தோத்திரம் செய்த பிறகு அம்மாமிசத்தைச் சாப்பிடுவதில் எத்தகைய பிணியும் கிடையாது. [மனு 23-5]

ஆனால் மனுஸ்மிருதி பசு மாமிசத்தை ஓர் உணவாகக் கூறவில்லையாயினும், மனிதன் சாப்பிடக்கூடிய உயிர்ப் பிராணிகளின் நாமங்களைக் கூறப்பட்டிருக்கும் அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

முள்ளெலி, பெருச்சாளி, ஆமை, முயல் ஆகியவைகளை இந்துமதநிபுணர்கள் உண்ணலாமென வைத்திருக்கின்றார்கள். நான்கு கால் மிருகங்களில் ஒட்டகம் ஒன்று மட்டும் நீங்கலாக

ஒரு பக்கத்தில் மட்டும் பல்லிருக்கக் கூடிய மிருகங்கள் எதானாலும் சாப்பிடலாம். (மனு 18—5.]

மேலே கூறப்பட்ட நிபந்தனைப்படி பசுவும் அதில் சேர்ந்ததென்பதில் ஐயமில்லை. ஏனெனில் பசுவுக்கு ஓரே பக்கத்தில் தான் பற்களுண்டு என்பது மனு ஸ்மிருதியில் மறைவானதன்று, மனு பசுவைச் சாப்பிடக் கூடாதென்று விலக்கியிருந்தால் ஒட்டகத்தோடு சேர்த்துப் பசுவையும் கண்டிப்பாகச் சாப்பிடக் கூடாதென விலக்கியிருப்பார்கள். ஆனால் முன்பின் வாசகங்களைக் கவனிப்பது கொண்டு பசுவைச் சாப்பிடக் கூடாதென விலக்கவில்லையென்று நாம் அர்த்தம் செய்து கொள்வது சரியான அத்தாட்சியாகமாட்டாது. ஆதலின் பிரமச்சாரியானவர் தம் வீட்டிற்கு திரும்பி வருவதற்காக குருவுக்கு சில காணிக்கைகள் கொடுக்கின்றார்கள். இவ் விஷயம் மனு ஸ்மிருதியில் தக்க ஆதாரமாக இருக்கிறது. அதில் எழுதியிருப்பதாவது:—

பிரமச்சாரிகள் விவாகத்திற்கு முன் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் காணிக்கைகளைச் சேகரித்து புஷ்பங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட கம்பளத்தில் உட்கார்ந்து மார்க்கக் கோட்பாட்டின் படி குருவுக்கு ஒரு பசுவை வெகுமதியாக கொடுக்கவேண்டும். [மனு 3—3] அதன் பின்வரும் ஒரு வாசகத்தில் காணப்படுவது:— இராஜாக்கள் பிரபல விருந்தினர்களுக்காக இன்பமான சாதமும் பசு மாமிசமும் செய்யப்பட்டு வந்திருக்கின்றது.

அஸ்வ மஹாபாரதம், ராமாயணம்.

அஸ்வத் தமது அரச கட்டளையில் துவர்க்கமாகக் கூறுவதாவது.—

ஆதி காலத்தில் அவனுடைய பொங்குமடத்தில் லக்ஷக் கணக்கான உயிர்ப் பிராணிகள் உணவுக்காக அறுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அவைகள் இன்னின்ன பிராணிகளென விவரமாகக் கூறப்படவில்லை. அவைகளின் விவரங்கள் தெரியாவிடினும் அவ்வாறு மாமிசம் சாப்பிடும் காலத்தில் அவர் ஆடுகளை மட்டும் போதுமென வைத்திருக்க மாட்டாரென நாம் ஊகித்துக் கொள்ள முடியும்.

மஹாபாரதம், ராமாயணம் இவைகளிலும் கோமேத யாகத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. கோமேதயாக மென்பது உயிர்ப் பிராணிகளை (குர்பானி) கொலை செய்வது, ஆனால் அதில் விஷயங்கள் விரிவாகக் கூறப்பட வில்லை. பசுவின் மாமிசத்தை உணவைப் போல் சாப்பிட்டு வந்ததா இல்லையாவென்ற விவரமும் கூறப்படவில்லை.

வைதீகத்தில் பசு மாமிசம்.

ஈஸவி 500, 600 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட சர்க் சந்தவென்ற வைதீகப் புத்தகத்தின் ஓர் அத்தியாயத்தில் இவ் விஷயத்தை விரிவுரையாக கூறப்பட்டிருக்கிறது. அதில் ஓர் அத்தியாயத்தில் உணவு விஷயமாக விவாதிக்கப்பட்டிருக்கி றது. அதில் ஓர் இடத்தில் காணப்படுவதாவது:—பசு, எருமை, பன்றி இவைகளின் மாமிசங்களை பிரதி தினந்தோறும் புசிக்கக் கூடாதெனவரையப் பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்ட விஷயங்களை நன்கு கவனிப்பது கொண்டு தெரிய வருவதாவது:—

அக்காலத்தில் ஹிந்துக்கள் பசு மாமிசம் சாப்பிட்டுவந் தார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் பசு மாமிசம் தக்க பலமுடைய வஸ்துவானதால் பிரதி நாட்கள் தோறும் சாப்பிடலாமென அனுமதிக்கப்படவில்லை. மற்றுமோர் இடத்தில் அக்கிரந்த கர்த்தாவானவர் கூறுவதாவது:- கர்ப்ப மாக இருக்கும் பெண்களுக்குப் பசுமாமிசம் கொடுக்கவேண்டு மென்றும், அது பிரசவ காலத்திற்கு வேண்டிய பலத்தைக் கொடுக்கிறதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மற்றும் சில வைதீகப் புத்தகங்களில் பல முறைகள் கூறப் பட்டிருக்கிறதாயினும் பசு மாமிசம் அறவே சாப்பிடக் கூடா தென எந்த வைதீகப் புத்தகத்திலும காணப்படவில்லை. அஸ்மனா விஷபாவுடைய சில வைதீகப் புத்தகத்தில் கூறப் பட்டிருப்பதாவது:- ஓர் மனிதன் போதையாக இருந்து தெளிவு பெற்றபின் அவன பசு இறைச்சி சாப்பிடுவதால் பெரும் அனுகூலங்களிருப்பதாக வரையப்பட்டிருக்கிறது.

பசு மாமிச உப்புக்கண்டம்

குர்ஹியா சூத்திரத்தில் பசு குர்பானியின் முறை ஓர் விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு சுடப்பட்ட பசு

மாமிசம் உப்புக் கண்டம் எனக் கூறப்படுகிறது. அதற்காக வேண்டி பசுக்களில் நல்லபசுவாகவும், கொழுத்ததாகவும் இருப்பதுடன் பாதாம் நிறமாகவும் இருக்கக் கூடாது. இவ்வாறு இந்தப்பசுவுக்கு பல நிபந்தனைகளுண்டு. அவ்வாறு குர்பனி செய்யப்படும். பசுவிற்கு எத்தனை நிபந்தனைகளிட்டிருக்கின்றார்களோ அத்தனை நிபந்தனைகளும் பொருந்திய ஓர் பசுவொன்று கிடைத்தால் வெந்நீர் கொண்டு குளிப்பாட்டி அதை ருத்ரா [சுவாமி] வுக்கு வேண்டுதலைசெய்து கட்டிவைத்து வளர்த்து வருகின்றார்கள். அந்தக் கன்றுக்குப் பற்கள் பூராவும் முளைத்து குறிப்பிட்ட தவணைவந்தவுடன குர்பானியின் மந்திரம் கிரியைகள் தெரிந்த புரோஹித் பிராமணனை அழைத்து அவர் படிக்க வேண்டிய மந்திரங்களைப் படித்து நெருப்பில் போடவேண்டிய வஸ்துக்களைப் போட்டு செய்ய வேண்டிய கிரியைகள் பூராவையும் செய்து முடித்துவிட்டு புது நூதனமாக தயார் செய்யப்பட்ட ஓர் இடத்திற்கு அந்தப் பசுவைக் கொண்டுபோய் பொதுவான சட்டப்படி அறுத்து அதன் ஈரலை எடுத்து ஓர் தட்டில் வைத்து 12 தேவதைகளின் நாமங்களைச் சொல்லிக்கொண்டே அந்தத் தட்டை நெருப்பில் வைத்து விடுகிறார்! அதன் பிறகு வைக்கோல் புற்களை விரித்து கொஞ்சம் அரிசிப் பொத்தலையும் பசு மாமிசத்தையும் வைத்து ருத்ராவுக்கு பூஜை செய்கின்றார்கள். பூர்வீக காலத்தில் அவ்வாறு குர்பானி செய்யப்பட்ட பசுவின் எலும்பு, ஜவ்வு, தோல் இவைகளை நெருப்பில் போட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு வந்த சம்பிதா ரிஷியானவர் அவ்வாறு நெருப்பில் போடப்படும் வஸ்துக்களில் பொது ஜனங்களுக்குப் பிரயோஜனம் தரக்கூடியதான தோலை நெருப்பில் போடுவதற்கு பதிலாக செருப்பாகத் தைத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாமென பொதுவாக உத்தரவு செய்து விட்டார். அவ்வாறு ருத்ராவுக்கு பூஜை செய்ததன் பிறகு பிராமண பூசாரியானவர் இடது பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு நேராக எழுந்து நின்று ஏதோ சில மந்திரங்களைப் படித்துக்கொண்டே அறுக்கப்பட்ட பசுவின் இரத்தத்தை அவ்விடங்களிலிருக்கும் சர்ப்பங்களுக்கு சேர்க்கை செய்து விடுகிறார். இவ்வெல்லாக் கிரியைகளும் செய்து முடித்த பிறகு கடைசியாக (சுவிஸ்த்தாக்கிர்த்) என்ற ஒரு பூஜையும் செய்யப் படுகிறது. பிறகு அப்பசுவுடைய நெஞ்சு மாமிசத்தினின்றும் சுடுவதற்காகக் கொஞ்சம் மாமிசத்தை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அதன் பிறகு மீதியாயிருக்கும் அப்பசுவின் மாமிசத்தைப் பொதுவாக எல்லோரும் சாப்பிடலாமென்று சில சூத்திரங்கள் கூறுகின்றன. சில சூத்திரங்கள் அப்பசுவை குர்பானி செய்தவர்கள் மட்டும் சாப்பிடலாமெனக் கூறுகின்றன.

இவ்வாறு ஒரு மனிதன் குர்பானி செய்து விட்டால் அவனுக்கு வயது அதிகமாகிறதென்றும், செல்வந்தனாவானென்றும், நல்ல நிலைமையிலே இருப்பானென்றும், தன்மதத்தில் கௌரவமுடையவனாக இருப்பானென்றும், சந்ததிகள் அதிகமாகுமென்றும், கால் நடை மிருகங்கள் அவனுக்கு அதிகமாகுமென்றும், அவ் வேதத்தில ஆசை காண்பிக்கப்பட்டிருக்கிறது. சகல தனவந்தர்களும் அவர்கள் வயதில் ஓர் விடுத்தமாவது இவ்வாறு குர்பானி செய்யவேண்டியது முக்கியமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு குர்பானி செய்யப்பட்ட பசு மாமிசம் எவ்வாறு சமைக்கப்பட்டதென்ற விஷயம் விரிவாகக் கூறப்படாதது மிகவும் வருந்தத்தக்கதே. சமைக்கப்படும் முறை விவரமாக கூறப்படாவிடினும் அறுக்கப்பட்ட பசுவின் நெஞ்சு மாமிசத்திலிருந்து சுடுவதற்காக மாமிசம் சுடுப்பதே அவர்கள் சமைக்கும் முறையை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

புராணங்கள்.

இதுவரை வெளி வந்திராத ஆராய்ச்சி புத்தகம்.

இதில் அடங்கிய விஷயங்கள் வருமாறு:—

பெரிய புராணம், மநுச்சோழன் வரலாறு, தில்லை வாழ்ந்தணர் புராணம், திருநீலகண்ட நாயனார் கதை, இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், சுந்தர மூர்த்தி சுவாமிகள், நந்தனார் சரித்திரம், கடவுள் அவதாரம், மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், வாமனாவதாரம், மும்மூர்த்திகளின் யோக்கியதை, பிரம்மா, விஷ்ணு, சிவன், தேவர்களின் காம விகாரம், திரிமூர்த்திகள், திருஞான சம்பந்தர், சமணர்களின் கொலைக்கு சம்பந்தரே காரணம், திருஞான சம்பந்தரும், பசுபதி யாகமும், புராணமும் காலமும், பஞ்சமா பாதகம், புராணமும் தேவாசுரத்தன்மையும், சூரிய சந்திர கிரகணம் முதலிய ஆராய்ச்சிகள் நிறைந்தது.

175 பக்கத்திற்கு மேல் நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 8. 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:—குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0
கடவுள் ... ... ,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0
வால்ட்டேர் ... ... ,, 0 4 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T, எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L, எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம் 0 6 0
ஷெ II-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியது.

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0
ஷெ காலிகோ பயிண்டு ... ,, 0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.) 0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் செல்வமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9	,, கிஷ்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) (200 பக்கம்)	0	5	0
11.	தர்ம பரிசோதனையும் புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பக்தும் அல்லது பார்ப்பனக்கொடுமை	0	4	0
14	ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சமதர்மப்பாடல்	0	2	0
18.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19	சமதர்மத்தைத் தாலாட்டு	0	2	0
20.	பர்னாட்ஷா உபந்யாசம்	0	1	0
21.	சோஷியலிசம்	0	2	0
22.	போல்ஷ்விக் முறை	0	1	0
23.	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	9
24.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
25	சமதர்ம உபந்யாசம்	0	0	6
26	சோதிட ஆராய்ச்சி	0	4	0
27.	மனுநீதி விளக்கம்	0	2	0
28.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
29	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
30	புது ருஷ்யா (200 பக்கம்)	0	8	0
31	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் (175 பக்கம்)	0	8	0
32.	கர்ப்ப ஆட்சி	0	6	0

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.